விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 32 சனிக்கிழமை (15.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 178

எவ்வித பாதுகாப்புமின்றி

## ஆவா குழுவினருடன் கலந்துரையாடத் தயார்

### வடக்கு ஆளுநர் பகிரங்க அழைப்பு

(யாழ்ப்பாணம்)

"எந்தவொரு பாதுகாப்பு ஏற்பாடுகளுமின்றி ஆவா குழுவுடன் கலந்துரையாடுவதற்கு நான் தயாராகவுள்ளேன்" என வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

கொக்குவில் புகையிரத நிலைய அதிபர் மீதான 23

## இந்து - பௌத்த சகோதரத்துவம் நாட்டுக்கு அவசியமாகவுள்ளது

### அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு

(வவுனியா)

இந்து, பௌத்த சகோதரத்துவம் தற்போதைய சூழலில் நாட்டுக்கு அவசியமாகவுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அடிப்படைவாதத்தை தோற்கடிப்பதற்கும், வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பௌத்த, இந்து மக்கள் சகோதரத்துவத்துடன் செயற்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் இந்து மத குருமார்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


அவர் தெரிவிக்கை 23

கிழக்கில் தமிழர்களின் காணிகளை பெயர் மாற்றி

# முஸ்லிம் குடியேற்றங்களை ஹிஸ்புல்லாஹ் ஸ்தாபித்துள்ளார்

ஆசிரியர் நியமனத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு அதிகளவு முஸ்லிம்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்

### யாழ்.மண்ணில் வைத்து அத்துரலிய ரத்ன தேரர்



**(யாழ்ப்பாணம்)**

**கிழக்கில் அதிகளவான தமிழர்களின் காணிகளைப் பெயர்மாற்றம் செய்து முஸ்லிம் குடியேற்றங்களை முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் ஸ்தாபித்துள்ளார் என யாழ்.மண்ணில் வைத்து அத்துரலிய ரத்ன தேரர் குற்றம் சுமத்தினார்.**

**மேலும் ஆசிரியர் நியமனத்திலும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு அதிகளவு முஸ்லிம்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.**

நேற்றைய தினம் யாழ்.நீராவியடி பகுதியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெற்ற சிங்கள அடிப்படைக் கற்கைநெறியினைப் பூர்த்தி செய்த தமிழ் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை நாட்டின் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் நிலையில் ஒரு சில அடிப்படைவாதக் குழுக்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளின் உதவியுடன் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கும் அரபு தேசத்தை இலங்கையில் நிறுவுவதற்கும் கனவு காண்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை ஹிஸ்புல்லாஹ் அடிப்படை மதவாதக் கொள்கையை விரிவுபடுத்தும் வகையிலும் மதத் தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் சாஹிராப் பல்கலைக்கழகத்தை நிறுவியமையை அறிய முடிகிறது.

அதுமட்டுமல்லாது அரசாங்கத்தில் முக்கிய பதவி 23

பொசனை முன்னிட்டு

## மதுபானச் சாலைகள் இரு நாட்கள் பூட்டு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் இரண்டு நாட்களுக்கு மூடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில், இன்றும் நாளையும் மதுபானசாலைகள் மூடப்படுமென அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொசன் போயா தினத்தை முன்னிட்டே 24

ஹிஸ்புல்லாவிடம்

## 3 மணி நேரம் வாக்குமூலம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஜனாதிபதி விசாரணைகள் ஆணைக்குழுவில் மூன்றரை மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கியதன் பின்னர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

இவர் நேற்று ஜனாதி 23

## சஹ்ரானுடன் தொடர்பை பேணிய

### இருவர் கண்டியில் கைது

(கண்டி)

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியும் தடைசெய்யப்பட்டுள்ள தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவருமான பயங்கரவாதி சஹ்ரானுடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வந்த இருவரை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் 23

## விபத்தில் படுகாயமடைந்த 19 வயது இளைஞன்

### யாழ்.போதனாவில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

விபத்தில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 19 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எனினும் அவர் தொடர்பான மேலதிக விபரங்கள் அறிய முடியவில்லை என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

"விபத்தில் படுகாய 23

அரச அதிகாரிகளின் மெத்தனப் போக்கால்

## வீடமைப்பு உதவித் திட்டங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன



### நீதியரசர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

அரச அதிகாரிகளின் மெத்தனப் போக்கால் வீடமைப்பு உதவிகள் வெளிநாட்டு உதவித் திட்டங்கள் அரைவாசிக்கும் மேல் மீளத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார். 03

# அறிவித்தல்

**கிளிநொச்சி மாவட்ட சமாதான நீதவான்கள் சங்கம் அமைத்தல்**

28.04.2019ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி அளவில் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரசேவை பணிப்பாளர் பணிமனை ஒன்றுகூடல் மகாநாட்டு மண்டபத்தில் நடாத்த ஏற்பாடாகியிருந்த சமாதான நீதவான்கள் சங்கம் அமைப்பது தொடர்பான கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டிருந்தது.இக்கூட்டம் 23.06.2019ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் இல-18,4ம் குறுக்குத்தெரு,கனகபுரம் கிளிநொச்சியில் அமைந்துள்ள நண்பர்கள் விடுதியில் நடாத்த ஏற்பாடாகியுள்ளது.கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இப் பதவியைப் பெற்ற அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு-மதிய உணவு ஏற்பாட்டிற்கு அமைய தங்கள் வரவினை முன் கூட்டியே உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**ஏற்பாட்டாளர்கள்,**
**தேசகீர்த்தி தா.அரியரத்தினம்,**
**சமாதான நீதவான்,**
**0778176225**

**தேசகீர்த்தி மா.பரராஜசேகரம்,**
**சமாதான நீதவான்,**
**0777047266.**

தெய்வீக சுகமளிக்கும் ஊழியங்கள் நடாத்தும்

## விடுதலை பெருவிழா



பாவம்,சாபம்,பில்லி,சூனியத்திலிருந்து விடுதலை,வியாதிகளிலிருந்தும் சுகம்


**சுவிசேஷக் கூட்டங்கள்**
**வேதாகம கருத்தரங்குகள்**
**சுகமளிக்கும் ஜெபக்கூட்டங்கள்**

ஜீன் 15 தொடக்கம் ஜீலை 08 வரை இக்கூட்டங்கள் ஏழாலை,யாழ் மாவட்டம்,வன்னி,நுவரெலியா,தீவகம் போன்ற இடங்களில் நடைபெறும்.

**அனுமதி இலவசம்**

செய்தியாளர்கள்:-சகோ டேவிட் இரத்தினசிங்கம்
(இம்மானுவேல் கிறிஸ்தவ ஐக்கியம்,லண்டன்)
சகோ ஜோன்சன் கணபதி(லண்டன்)
சகோ அகஸ்டின் இரத்தினசாமி(இந்தியா)
தொடர்புகளுக்கு:-போதகர் குலேந்திரன்(0778520121)
போதகர் டேவிட் இரத்தினசிங்கம்(0769839038)

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 19 . 01 . 1950

உதிர்வு 14 . 06 . 2019

## அமரர் சின்னையா நாகமுத்து

புவியியற்துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் திரு.நா.பிரதீபராஜா அவர்களின் அன்புத் தந்தையார் சின்னையா நாகமுத்து அவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை (14.06.2019) இறைபதமடைந்து விட்டார்.அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**விரிவுரையாளர்கள்,ஊழியர்கள்**
**புவியியற்துறை யாழ் பல்கலைக்கழகம்**

(9156)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் வைத்திலிங்கம் குகராசா

எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும் முன்னாள் தலைவரும் தற்போதைய இயக்குனர் சபை உறுப்பினரும் சமூக ஆர்வலருமான

**அமரர் வைத்திலிங்கம் குகராசா**
(சமாதான நீதவான்)


அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் இவரது குடும்பத்தினருடன் நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்கள்,பணியாளர்கள்**
**கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்**
**கிளிநொச்சி**


(0699-1)

# போர்க்கால அட்டூழியங்களை மறைப்பதற்கு போட்டி போடும் சிங்கள அரசியல்வாதிகள்!

## நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு







(யாழ்ப்பாணம்)

போர்க்கால அட்டூழியங்களை மறைக்க சிங்கள அரசியல்வாதிகளும் அலுவலர்களும் போட்டி போட்டுக் கொண்டு ஒற்றுமையாகச் செயற்பட ஆயத்தமாக உள்ளார்கள் எனச் சுட்டிக்காட்டிய, வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், எம்முள் சிலர் தமது பிரத்தியேக நன்மைக்காகப் பெரும்பான்மை அரசியல்வாதிகளுக்கு "ஆமாம்" போடத் தயங்காது வாழ்ந்து வருகின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டோர் - பதின்மம் கழிந்தும் சுயமதிப்பீடு மாநாடு யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"பாதிக்கப்பட்டோர் - பதின்மம் கழிந்தும்" என்னும் தலைப்பில் ஒரு சுய மதிப்பீட்டு நிகழ்வை யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகமும் யாழ்ப்பாணம் தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பான **Differently Abled Tamil Association** இணைந்து நடத்த முற்பட்டிருப்பது மகிழ்விற்குரியது.

போரின் பின்னர் எமக்கான தேவைகள் ஏராளம் இருந்தன. அவற்றை அடையாளப்படுத்த வேண்டியிருந்தது. இருட்டில் தேட முற்படுபவர்களாக இல்லாது எமது தேவைகளைக் கண்டறிந்து, ஆராய்ந்து, அடையாளப்படுத்தி, அவற்றை எவ்வாறு தீர்த்து வைக்க முடியும் என்பது சம்பந்தமாக நான் 2013இல் பதவி ஏற்றதும் அப்போதைய ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி சுபினேநந்தி அவர்களுடன் பேசினேன்.

2003இல் தயாரித்தது போல் வடக்கு மாகாணத்திற்கு ஒரு தேவைகள் மதிப்பீட்டை (**Needs' Assessment** ) தயாரித்துத் தரும்படி வேண்டினேன். அப்போது இருந்த அரசாங்கம் மகிந்த ராஜபக்ஷவுடையது. ஐக்கிய நாடுகள் நிறுவனம் போரின் முடிவில் பாதிக்கப்பட்டோருக்காக எதையும் செய்யாது வாழாதிருந்தது என்ற குற்றச்சாட்டுக்கள் அப்போது இருந்தன. அந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய நிலையில் சுபினேநந்தி இருந்தார். அவருக்கும் அப்போதைய அரசாங்கத்திற்கும் இடையில் மிக நெருக்கமான உறவு இருந்தமை யாவரும் அறிந்ததே.

முழுமையான தேவைகள் மதிப்பீட்டைச் செய்வதாக ஒப்புக்கொண்டதன் பின்னர் மனித இன நலம் சம்பந்தமான **Humanitarian** அறிக்கையை மட்டும் பெறவே அவர் முன்னின்றார். முழுமையான அறிக்கை பெறப்பட்டால் சாட்சியில்லா யுத்தத்தின் போது அரசாங்கம் செய்த அட்டூழியங்கள் வெளிவந்து விடும் என்ற பயம் அரசாங்கத்திற்கும் இருந்தது. அரசாங்கத்துடன் நல்லுறவைப் பேணி வந்த சுபினேநந்தியிடமும் இருந்தது.

குறித்த அறிக்கையில் பல பிழையான தகவல்கள் இடம்பெற்றிருந்தன. உதாரணத்திற்கு கணவன்மார்களைப் போரில் இழந்த பெண்களின் தொகை வடமாகாணத்தில் சுமார் 49 ஆயிரமாக இருந்தது. ஆனால் அவர்கள் அறிக்கைப்படி சுமார் 7500 பேரே போரில் கணவன்மார்களை இழந்தவர்கள்.

29 ஆயிரம் பேரின் கணவன்மார்கள் இயற்கை மரணம் எய்தினார்கள் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. 29ஆயிரம் பேர் அரச படைகளால் அநியாயமாகக் கொல்லப்பட்டார்கள் என்ற விபரத்தை வெளிக்கொண்டுவர வதிவிடப் பிரதிநிதி கூட பின்நின்றார்.

அரசாங்கம் மாறிய பின்னர் இது சம்பந்தமாக பிரதமருடன் பேசினேன். தற்போது இது பற்றி பிரதமர் தலைமைத்துவத்தில் பாஸ்கரலிங்கம் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார். இதுகாறும் இவை சம்பந்தமாக எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் பற்றி நாம் அறிந்திருந்தால் தான் அடுத்த கட்டத்திற்குச் செல்லலாம்.

தரவுகள் சரியாக இருந்தால் தான் புள்ளிவிபரங்களை வழி நடத்திச் செல்லலாம். பிழையான தகவல்களை அரசாங்கம் தந்துதவினால் எமது பிரச்சினைகள் சம்பந்தமாக உரிய நிவாரணங்களைப் பெற முடியாது போய்விடும்.

ஆகவே உங்களின் சுயமதிப்பீட்டின் வழிமுறையானது இதுவரை ஐ.நா. ஸ்தாபனத்தினாலும் அரசாங்கத்தினாலும் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் பற்றிப் போதிய அறிவுபெற இடமளிப்பதாக இருக்க வேண்டும்.

தற்போதைய ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதியிடம் வடகிழக்கு தேவைகள் பற்றி இதுவரை தயார் செய்த சகல அறிக்கைகளினதும் பிரதிகள் பெறப்பட வேண்டும். பாஸ்கரலிங்கம் அவர்களுடன் அல்லது வடமாகாண பிரதம செயலாளர் பத்திநாதனுடன் ஒரு நேரத்தை ஒதுக்கி அவர்களால் இதுவரை காலமும் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் பூரண விபரங்கள் போன்றவை பெறப்படவேண்டும். அதன் பின்னர் தான் உங்களின் அமைப்பு முறையான சுயமதிப்பீட்டில் இறங்க வேண்டும்.

இந்த நிகழ்ச்சி அமைப்பாளர்கள் எம்மை சந்திக்க வந்த போது இந்த சுயமதிப்பீடு மேற்கொள்ளப்படுவதன் நோக்கம் என்னவென்று கேட்கப்பட்டது. இந்த நாட்டின் வடக்கு-கிழக்கு பகுதிகளில் 30 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற கொடிய இன அழிப்பு நிகழ்வு முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 10 ஆண்டுகள் முழுமையாக நிறைவுற்றிருக்கின்ற நிலையிலும் இப்போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார நிலைகள் எந்த அளவில் இருக்கின்றன என்பதனை ஆராய்வதற்கும் கடந்த 10 வருட காலங்களில் இவர்களுக்கு வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிகள், வழங்கப்பட முடியாமல் போன உதவிகள் மற்றும் இவர்களின் வாழ்வாதார நிலைகளை எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்திற்கு உயர்த்த முடியாமல் போனமைக்கான காரணங்கள் பற்றியும் ஒரு தெளிந்த முடிவை எட்டுவதற்காகவே இந்த மகாநாடு என்றார்கள்.

இவ்வாறான சுயமதிப்பீடு ஒன்றினை மேற்கொண்ட பின்னர் இவ் அறிக்கையின் ஊடாக மேற்கொண்டு என்ன செய்யப் போகின்றீர்கள் என்று கேட்டோம். அதற்கு அவர்கள் இனிவரும் காலங்களில் வழங்கப்பட இருக்கின்ற உதவிகள் அனைத்தையும் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட பொறிமுறை வழியாக வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்வாதார நிலைகளை மேம்படுத்த முறையான ஒரு திட்டத்தை வகுக்க முடியும் என்றார்கள்.

தரவுகள் சரியென்றால் இவ்வாறான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்த முடியும். சரியான தகவல்களை, முறையான தரவுகளைப் பெறுவதே உங்களின் மிகப்பெரிய சவாலாக இருக்கின்றது என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். நடந்தவற்றை மூடி மறைக்க தரவுகள் சரிப்படுத்தப்பட்டுள்ளமையை மனதிற்கொள்ளுங்கள்.

எவ்வாறு ஒரு பிரச்சினை என்று வந்தவுடன் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஒன்றுபட்டு செயலாற்ற முன்வந்துள்ளார்களோ அதே போல் போர்க்கால அட்டூழியங்களை மறைக்க சிங்கள அரசியல்வாதிகளும் அலுவலர்களும் போட்டி போட்டுக் கொண்டு ஒற்றுமையாகச் செயற்பட ஆயத்தமாக உள்ளார்கள் என்பதையும் நீங்கள் கணக்கில் எடுக்க வேண்டும். எம்முள் சிலர் தமது பிரத்தியேக நன்மைக்காக பெரும்பான்மை அரசியல்வாதிகளுக்கு "ஆமாம்" போடத் தயங்காது வாழ்ந்து வருகின்றார்கள். உங்கள் பயணத்தின் போது நீங்கள் சந்திக்கக்கூடிய எதிர்மறை நிலைகளுள் இதுவும் ஒன்று.

நான் முதலமைச்சராக கடமையாற்றிய கடந்த 5 வருடங்களில் மாற்றுத் திறனாளிகள் மீதும் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் அதீத கவனம் செலுத்தியிருந்தோம்.

இவர்களுக்கு வழங்கப்படுகின்ற வாழ்வாதார உதவிகள் வெறுமனே பண உதவிகளாக மேற்கொள்வதானால் அவற்றால் பலன் எதுவுமில்லை என்பதனை உணர்ந்து கொண்டோம். நாம் வழங்குகின்ற உதவிகள் அனைத்தும் அவர்களின் அப்போதைய உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்வனவாக அமைந்திருந்திருக்கலாம்.

ஆனால் அவை ஒரு நிரந்தரத்தீர்வாக அமைவதற்கு சாத்தியக்கூறுகள் மிக அரிதாகவே காணப்பட்டன. நாம் வழங்குகின்ற உதவிகள் அவர்களுக்கு ஒரு நிரந்தர தீர்வாக அமைகின்ற போதே அவர்களின் வாழ்வாதார நிலைகள் உயர்த்தப்படலாம். அந்த வகையிலேயே எமது திட்டங்கள் அனைத்தும் அமைந்திருந்தபோதும் வடமாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளின் அளவுகள் அவ்வாறான பெரிய திட்டங்களை நிறைவேற்ற போதுமானதாக அமையவில்லை. எனினும் எமக்கு கிடைக்கப்பெற்ற சொற்ப நிதிகளில் இருந்து முடிந்தவரை உதவிகளை மேற்கொண்டிருந்தோம்.

ஒவ்வொரு வருடமும் முதலமைச்சரின் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 10 வீடுகள் வரை நிர்மாணித்து வழங்கியிருக்கின்றோம். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு முன்னுரிமை கொடுத்து வந்தோம். அது போன்று பாதிக்கப்பட்டவர்கள் தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு வசதியாக பல்வேறு உதவிகளை வழங்கி வந்தோம். உதாரணமாக விவசாய முயற்சிகளில் ஈடுபடக் கூடியவர்களுக்கு விவசாய உபகரணங்கள், நீர் இறைக்கும் இயந்திரம் போன்ற பொருட்களையும் தையல் முயற்சியில் ஈடுபடக்கூடிய பெண்களுக்கு தையல் இயந்திரம் அதனோடு இணைந்த உபகரணங்கள் ஆகியவற்றையும் வழங்கி வந்திருந்தோம்.

அதேபோன்று வர்த்தக முயற்சியில் ஈடுபடக்கூடியவர்களுக்கு வர்த்தக தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய உபகரணங்கள், இலத்திரனியல் நிறுவை இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் ஆகியவற்றை வழங்கி வந்திருந்தோம். ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு ஆகியவற்றுக்கான உதவிகளையும் முடிந்தளவு வழங்கி வந்திருந்தோம்.

ஜனாதிபதி தொடக்கம் பிரதமர் மற்றும் உயர்திகாரிகள் வரை அனைவரிடமும் இவர்களின் தேவைகள் பற்றியும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவிகள் குறித்தும் எடுத்துக் கூறியிருக்கின்றோம். இவை அனைத்துக்கும் மேலாக வெளிநாட்டு உயர் ஸ்தானிகர்களை சந்திக்கக் கூடிய வாய்ப்புக்கள் கிடைக்கின்றபோதெல்லாம் இவர்களின் தேவைகள் பற்றி எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கென தனியான ஒரு அலகை சுகாதார அமைச்சின் ஊடாக நிறுவி அதனூடாக அவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. அவற்றின் தற்போதைய நிலை பற்றி எனக்குத் தெரியாது.

வீடமைப்பு உதவிகள் போன்ற வெளிநாட்டு உதவித்திட்டங்கள் கிடைக்கப்பெற்ற போதும் அவற்றை மக்களுக்கு வழங்குவதில் எமது அரச அதிகாரிகள் காட்டிய மெத்தனப்போக்கு விசனத்திற்குரியது.

போரின் போது ஒரு இடத்தில் நிரந்தரமாகக் குடியிருந்தவர்களை அரச படைகள் அவர்களின் வீடு வாசல்களை உடைத்தெறிந்து அவர்களை இடம்பெயர செய்துவிட்டு பின்னர் மீள்குடியமர்வின் போது குடும்பத்தில் ஒருவருக்கு வீடில்லை, இரு உறுப்பினர்களுக்கு வீடில்லை, அரச உத்தியோகத்தர்களுக்கு வீடில்லை என தாமாகவே சட்டங்களை வகுத்து செயற்பட்டது மாத்திரமன்றி வழங்கப்பட்ட வீடமைப்பு உதவித் திட்டங்களில் அரைவாசிக்கு மேல் மீளத் திருப்பி அனுப்பப்பட்டதையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இவை மாகாண சபையால் திருப்பி அனுப்பப்படவில்லை. நாங்கள் ஒரு சதத்தையேனும் என்றுமே திருப்பி அனுப்பிவிடவில்லை. ஆனால் பிரதேச செயலாளர்களும் மத்தியின் அலுவலர்களுமே இவ்வாறு திருப்பி அனுப்பி உள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது என்பது இடைத்தரகர்களின் கமிஷன் பணத்தில் தங்கியிருக்கின்றது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இதுதான் எமது மக்களின் இன்றைய நிலை. எமது மக்களின் வாழ்வாதார நிலைகளை மேலுயர்த்துவதற்கு எமது மக்களால் மட்டுமே முடியும். நாங்களாக முன்வந்து எம் மக்கள் நலம் காக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜோ ரூட் மீண்டும் சதம் இங்கிலாந்து அபார வெற்றி


இங்கிலாந்து - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டம் நேற்று சவுத்தாம்ப்டனில் நடைபெற்றது. இதில் டாஸ் ஜெயித்த இங்கிலாந்து அணி முதலில் பீல்டிங்கை தேர்வு செய்தது.

முதலில் பேட் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணி தொடக்கத்திலேயே விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. நிக்கோலஸ் பூரன் மட்டும் அரைச்சதம் கடந்தார். இறுதியில் 44.4 ஒவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 212 ரன்களே சேர்த்தது. இதனால் இங்கிலாந்து வெற்றிக்கு 213 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதையடுத்து 213 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் களம் இறங்கிய இங்கிலாந்து அணி தொடக்க முதலே பேட்டிங்கில் ஆதிக்கம் செலுத்தியது. அதிரடியாக ஆடிய தொடக்க ஆட்டக்காரர் ஜோ ரூட் இந்த உலகக்கோப்பையில் இரண்டாவது சதத்தை பதிவு செய்தார்.

இதையடுத்து 33.1 ஒவர்களில் இலக்கை எளிதாக எட்டி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஜோ ரூட் சரியாக 100 ரன்களுடனும், பென் ஸ்டோக்ஸ் 10 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

# பாகிஸ்தானை எதிர்கொள்ள ஆர்வமாக உள்ளோம்-கோலி



பாகிஸ்தானுக்கு எதிராக முழு திறமையை வெளிப்படுத்துவோம் என்று, இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் விராட் கேலி தெரிவித்துள்ளார்.

நாளை நடைபெறும் போட்டியில் இந்திய அணி, பாகிஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. இந்த இருநாடுகள் மோதும் போட்டி என்றாலே பெரிய எதிர்பார்ப்பு இருக்கும். மேலும், உலகக் கோப்பையில் இதுவரை பாகிஸ்தான் அணி இந்திய அணியை வீழ்த்தியதில்லை.

எனவே, இந்தப் போட்டி மிகப் பெரிய எதிர்பார்ப்பை ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், இதுகுறித்து இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் விராட் கோலி கூறுகையில், ‘அடுத்து நாங்கள் நாளை 16ஆம் திகதி பாகிஸ்தானுடன் மோத இருக்கிறோம்.

இந்தப் போட்டியை வைத்து உணர்வு பூர்வமான சூழல் நிலவுவதால், முதல் முறையாக உலகக்கோப்பையில் விளையாடும் வீரர்களுக்கு நெருக்கடி ஏற்படலாம.

ஆனால், களத்துக்கு சென்றுவிட்டால் எல்லாமே அமைதியாகிவிடும். பாகிஸ்தானுக்கு எதிரான போட்டிக்கு வகுத்துள்ள வியூகங்களை செயற்படுத்துவோம்.

இதுபோன்ற மிகப்பெரிய ஆட்டத்தில் விளையாடுவது மிகப் பெரிய கௌரவமாகும். இத்தகைய ஆட்டங்கள் எங்களது முழுத் திறமையை வெளிக்கொண்டு வரும். இதனால் பாகிஸ்தானுடன் சிறப்பாக விளையாடுவோம்’ என தெரிவித்துள்ளார்.(க)

# இந்தியா- பாகிஸ்தானுக்கிடையில் இதுவே வித்தியாசம்-டெண்டுல்கர்




இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு அணிகளுக்கு இடையே ஆன வித்தியாசம் குறித்து சுவாரசியமான தகவல் ஒன்றினை தெரிவித்துள்ளார்.

உலகக்கோப்பை கிரிக்கெட்டின் 17ஆவது லீக் போட்டியில் அவுஸ்திரேலியாவிற்கு ஏதிரான பாகிஸ்தான் அணியின் ஆட்டத்தினை பார்த்தேன். முதலில் ஆடிய ஆஅவுஸ்திரேலிய அணி 308 ஓட்டங்களை பாகிஸ்தானுக்கு இலக்காக நிர்ணயித்தது. தொடர்ந்து விளையாடிய பாகிஸ்தான் அணி 136 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்கள் மட்டுமே இழந்து வலுவான நிலையில் இருந்தது. ஆனால் போட்டியின் முக்கியமான பகுதியில் தங்களது விக்கெட்களை பறிகொடுத்தனர். அவர்கள் இக்கட்டான நிலையில் இருக்கும் போது நெருக்கடியை கையாள முடியாமல் தோல்வியினை தழுவினர்.

ஆனால் இந்திய அணியினை பொருத்தவரை பேட்டிங், பீல்டிங், பந்துவீச்சு ஆகிய அனைத்து துறையிலும் சிறப்பாக செயற்பட்டு வருகிறது. தொடக்க வீரர்கள் தங்கள் பங்கினை சிறப்பாக செய்து வருகின்றனர். விராட் கோலி அணியினை நிலைப்படுத்துவதற்கு முக்கிய வீரராக உள்ளார். டோனி மற்றும் பாண்டியா போன்ற வீரர்கள் இக்கட்டான சூழ்நிலையின்போது அணியினை சரிவிலிருந்து மீட்கும் பொறுப்பினை சரிவர செய்து வருகின்றனர்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளை பொருத்தவரை போட்டியின் நெருக்கடியை கையாள்வதே இரு அணிகளுக்கு இடையே ஆன வித்தியாசமாகும். (க)

# மழையால் கைவிடப்பட்ட போட்டி மல்லாக்கப்படுத்த டோனி



உலகக்கோப்பை தொடரில் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த இந்தியா - நியூசிலாந்து போட்டி மழை காரணமாக ரத்து செய்யப்பட்டது.

இங்கிலாந்தில் நடைபெறும் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் மோத இருந்த இந்த போட்டி ட்ரெண்ட் பிரிட்ஜ், நாட்டிங்காம் மைதானத்தில் நடைபெறுவதாக இருந்தது. இந்த ஆட்டம் மழையால் போட்டி ஆரம்பிக்காமலேயே ரத்து செய்யப்பட்டது. இதனால் இந்திய ரசிகர்கள் பலரும் ஏமாற்றம் அடைந்தனர்.

இதையடுத்து இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டன. இந்நிலையில், மழையால் போட்டி நடைபெறவில்லை என்ற சோகத்தில் இந்திய வீரர்கள் அமர்ந்திருக்க, டோனி கண்ணை மூடிக்கொண்டு மல்லாக்க படுத்து தூங்கி கொண்டு இருக்கும் புகைப்படம் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. (க)

# இனி இந்தியாவிடம் கெஞ்சமாட்டோம் பாகிஸ்தான் கிரிக்கெட்சபைத் தலைவர்



எங்களுடன் விளையாட வாருங்கள் என இந்தியாவிடம் இனிமேல் கெஞ்சமாட்டோம் என, பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் இஷான் மானி ஆவேசமாக தெரிவித்துள்ளார்.

தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில், இந்தியா-பாகிஸ்தான் அணிகள் 7ஆவது முறையாக நாளை சந்திக்க உள்ளன. இதுவரை இந்தியாவுடன் உலகக்கோப்பையில் பாகிஸ்தான் அணி ஒருமுறை வெற்றி பெற்றதில்லை.

எனவே இந்தப் போட்டிக்கு எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. மேலும், இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் 2012-13ஆம் ஆண்டுக்குப்பின்னர் நடக்கவில்லை.

எனினும், 6 போட்டிகள் நடத்த இருநாட்டு அணிகளின் கிரிக்கெட் சபைகளும் ஒப்பந்தம் செய்த நிலையில், இந்திய அரசு அனுமதி அளிக்காததால் இதுவரை இருநாடுகளுக்கு இடையிலான போட்டித் தொடர் நடத்தப்படாமல் இருந்து வருகிறது.

இந்நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் இஷான் மானி இதுகுறித்து கூறுகையில், ‘எங்களுடன் வந்து கிரிக்கெட் விளையாடுங்கள் என்று இந்தியாவை இனிமேல் கெஞ்சமாட்டோம். வேறு எந்த நாட்டு அணியையும் வலிந்து போய் அழைக்கவும் மாட்டோம்.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான இருநாட்டு கிரிக்கெட் தொடர் மிகவும் கண்ணியமாக, மதிப்புடன் நடத்தப்பட வேண்டும். தொடங்கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இந்த ஆண்டு நவம்பர் மாதம் பாகிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணி, இந்தியாவுக்கு சென்று ஐ.சி.சி சம்பியன்ஷிப் போட்டியில் விளையாடுகிறது.

இந்தப் போட்டிக்குப் பின் இரு நாடுகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் வரும் என்று நம்புகிறேன். பாகிஸ்தானில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை மீண்டும் நடத்த முடிவு செய்துள்ளோம். முதலை கட்டமாக, செப்டெம்பர் மாதம் இலங்கை அணி எங்கள் நாட்டுக்கு வருகிறது. டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியின் ஒருபகுதியாக, 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. (க)

# கலைஞர்களுக்கான அரச விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

இலங்கையில் கலையிலக்கியத் துறைகளுக்கு அளப்பரும் பங்காற்றுகின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் கலைஞர்களை உள்ளடக்கி, அறுபது வயதிற்கு மேற்பட்ட கலைஞர்களுக்குக் கலாபூஷண விருது முதலான அரச விருதுகள் வருடந்தோறும் வழங்கப்பட்டும் வருகின்றன.

ஆனாலும் இலங்கைத் தீவில், தமிழர்தம் பாரம்பரிய மற்றும் நவீன கலைகளைப்பேணிப் பாதுகாத்து, ஊக்குவித்து, அரச கௌரவம் நல்கும் செயற்பாடு முனைப்புடன் இதுவரை இடம்பெறவில்லை என்பது பெருங்குறைபாடும் மறுக்க முடியாத உண்மையும் ஆகும்.

இந்த நிலையில், தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசனின் வழிகாட்டலின் கீழ், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால், தமிழர் தம் பாரம்பரிய மற்றும் நவீன கலைகளைத் தனியே பேணிப் பாதுகாத்து, ஊக்குவித்துத் தம் வாழ்நாளிற் பெரும் பகுதியை இக் கலைகளுக்காகவே அர்ப்பணித்து வாழுகின்ற கலைஞர்களை அங்கீகரித்தும் வளரும் இளங் கலைஞர்களை ஊக்குவித்தும் அவர்களுக்கான அரச விருது வழங்கிக் கௌரவம் நல்கும் செயற்பாடு "தமிழர் பாரம்பரிய மற்றும் நவீன கலைகள் - கலைஞர்களுக்கான அரச விருது வழங்கும் விழா - 2019"எனும் பெயரில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் வெகு சிறப்பாக முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழர்தம் கலைகள் மற்றும் பண்பாட்டை வளர்த்தெடுக்கவும் மரபுவழி மற்றும் நவீன கலை வடிவங்களைப் பேணிக்காக்கவும் எழுத்து, பாடல், வாத்தியம், நாட்டியம், அறிவிப்பு, நெறியாள்கை, சினிமா, கிராமியக் கலைகள் மற்றும் ஏனைய நுண்கலைகள் முதலான பல்துறைக் கலைஞர்கள் இவ் அரச விருது விழாவில் கௌரவிக்கப்படவுள்ளனர்.


கலைக்காகவே தங்கள் வாழ்வை அர்ப்பணஞ்செய்து, கலையுலகிற்குத் தம் கலைத் திறனால் இருபது வருடங்களுக்குக் குறையாத உன்னதபங்களிப்பை நல்கிய, அறுபது வயதிற்கு மேற்பட்ட மூத்த கலைஞர்கள் கலையுலகில் அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் இன்றும் செயற்படுவதோடு, பதினைந்து வருடங்களுக்குக் குறையாத கலைத்துறை சார் சேவையை ஆற்றிவரும் முப்பது வயதிற்கு மேற்பட்ட, அறுபது வயதிற்கு உட்பட்ட கலைஞர்கள் தமிழர் தம் கலைகள், மரபுவழி மற்றும் நவீன கலையம்சங்களை அழியாது காப்பாற்றும் மகோன்னத பணியில் பத்துவருடங்களிற்குக்குறையாத அனுபவமும் அர்ப்பணிப்பான சேவையிற் தம்மை ஈடுபடுத்தி இந்தத் திருநாட்டில்.எதிர்காலத்தில் இக் கலைகளை வாழவைக்கப்போகும் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட, முப்பது வயதிற்கு உட்பட்ட இளங் கலைஞர்கள் என்று மூன்று வகுதியினருக்கும் இவ் அரச விருது வழங்கிக் கௌரவிப்பதில் அமைச்சும் திணைக்களமும் பெருமை கொள்வதோடு, கலைஞர்கள் மத்தியிற் புத்துணர்வையும் உத்வேகத்தையும் ஏற்படுத்திக்கொள்ளும் எனவும் நம்புகிறது.

இவ்விருதுக்கான விண்ணப்பப்படிவங்களை, தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பிராந்திய அலுவலகங்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் பெற்றுக்கொள்வதோடு, **www.hindudept.gov.lk** என்ற திணைக்கள இணையத் தளத்திலும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு,"தமிழர் பாரம்பரிய மற்றும் நவீன கலைகள் - கலைஞர்களுக்கான அரச விருது வழங்கும் விழா - 2019" எனக் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டு, 2019.07.20 ஆம் திகதிக்கு முன்னதாகப் "பணிப்பாளர், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,248 - 1/1, காலி வீதி, கொழும்பு - 04" எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும் என இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்தார். (இ-7)

# அப்பாவிகளைக் கொன்று குவித்த பயங்கரவாதத்தின் கோர முகத்தை இலங்கையில் நான் கண்டேன்!

## இந்தியப் பிரதமர் மோடி தெரிவிப்பு



(பிஷ்கெக்)

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தபோது உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலின் கோரமுகத்தை காண முடிந்ததாக இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்தார்.

கிர்கிஸ்தான் நாட்டின் தலைநகரான பிஷ்கெக் நகரில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் இருநாள் மாநாடு நேற்று ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பயங்கரவாத தீமைகளில் இருந்து மக்களை காப்பாற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உள்ள நாடுகள் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை இதன்போது சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட ஒரு சமுதாயம் உருவாக இந்தியா எப்போதுமே முன்னுரிமையளித்து வருகின்றது.

நான் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது கொழும்பு நகரில் உள்ள அந்தோனியார் தேவாலயத்தில் அப்பாவி மக்களின் உயிர்களை கொத்துக் கொத்தாக கொன்று குவித்த பயங்கரவாதத்தின் கோரமுகத்தைக் காண முடிந்தது.

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும், துணைபுரியும், நிதியளித்து ஆதரிக்கும் நாடுகள் மீது நடவடிக்கை எடுக்க ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பிராந்திய பயங்கரவாத ஒழிப்புப்பிரிவு அக்கறை காட்ட வேண்டும் எனவும் மோடி வலியுறுத்தினார்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அர்ஜூன் மகேந்திரன் உள்ளிட்ட 10 பேருக்கு நிரந்தர விசேட மேல் நீதிமன்றில் வழக்கு

இலங்கை மத்திய வங்கிபிணை முறி மோசடி விவகாரம் ஊடாக அரசுக்கு 88 கோடி ரூபாவுக்கும் அதிக நட்டம் ஏற்படும் விதத்தில் மோசடி செய்தமை தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், அவரது மருமகனான அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட 10 பேருக்கு எதிராக மேல் மாகாண நிரந்தர விசேட மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய அனுமதி வழங்கினார்.

இந்த வழக்கின் தன்மை, சர்ச்சை மற்றும் ஊழல் காரணமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பாரிய அச்சுறுத்தல் என்பவற்றைக் கவனத்திற்கொண்டு, விஷேட மேல் நீதிமன்றில் இந்த விவகாரம் குறித்த குற்றப் பத்திரத்தை தாக்கல் செய்ய சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா, பிரதம நீதியரசரிடம் கோரிக்கை முன்வைத்த நிலையில் இதற்கான அனுமதி நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. (இ-7)

# சிறுதீவுப் பகுதியில் பெருமளவு வெடிபொருட்கள்

(யாழ்ப்பாணம்)

மக்கள் நடமாட்டம் இல்லாத சிறுதீவுப் பகுதியில் பெருமளவு வெடிபொருட்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், கடற்படையினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் இணைந்து, இந்த வெடிபொருட்களை நேற்று மீட்டனர். 98 டெட்டனேட்டர்கள், 12 கிலோ சி.4 வெடிமருந்துகள் மீட்கப்பட்டன.

மக்கள் நடமாட்டமற்ற இந்தத் தீவில் மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக இவற்றைப் பயன்படுத்தியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-101)

# இராசி பலன்

15.06.2019

வைகாசி 32, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு

திரயோதசி பிற்பகல் 3.29 மணிவரை

விசாகம் முற்பகல் 11.06 மணிவரை

சுபநேரம் 2.53 - 4.23 மணிவரை

இராகுகாலம் 8.53 - 10.23 மணிவரை

சிவத்தமிழ் அன்னை நினைவு தினம்

வளவன்

கிரகநிலை: சூரி., சுக் | ராகு., புத.செவ் | சனி., கேது | குரு, சந்

சந்திராஷ்டமம்: அச்சுவினி, பரணி

**மீனம்:** அன்பால் சாதித்துக்காட்டும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், வர வேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம்.

**மேடம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை, புதிய பொறுப்புக்களை யோசித்து செய்வது நல்லது.

**இடபம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்:** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், கௌரவமான நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் நலன்கருதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** கல்வி நலன்கருதிய சுப செலவுகள் இடம்பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

**மகரம்:** மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொழில் ரீதியாக புதிய முயற்சிகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வாகன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**தனுசு:** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், நண்பர்கள் வழியில் சுப விரயங்கள் ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** விரும்பிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**துலாம்:** புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி:** நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பயணங்களால் பலனுண்டு.



தென்மராட்சி-கச்சாய் தெற்கு பாதாள வைரவர் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா கடந்த புதன்கிழமை நடை பெற்றது. (படங்கள்- சுபேசன்

# யாழில் இரண்டாவது வறுமை பிரதேசமாக சாவகச்சேரி

(சாவகச்சேரி)

யாழில் இரண்டாவது வறுமைப் பிரதேசமாக தென்மராட்சி காணப்படுவதாக தென்மராட்சிப் உதவிப் பிரதேச செயலர் திருமதி வினோஜிதா கௌசிகன் தெரிவித்தார். அண்மையில் சாவகச்சேரியில் இடம்பெற்ற சமுர்த்தி உரித்துச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் உரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அறுபது கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட தென் மராட்சியில் 23000இற்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. அதில் 6185 குடும்பங்கள் மட்டுமே சமுர்த்திப் பயன்களைப் பெறுகின்றன. தற்போது கல்வி இராஜாங்க அமைச்சரின் முயற்சியால் மேலும் 1485 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் இந்த நிதி வறுமைக்கோட்டில் இருந்து மீட்டெடுக்கும் கொடுப்பனவாகக் காணப்படுகிறது. சமுர்த்தித் திட்டம் பல நன்மைகளைப் பெற்றுத் தருகின்றது. இவ்வாறான கொடுப்பனவுகளில் தங்கி வாழாமல் அதை வைத்து வறுமையில் இருந்து விடுபட வேண்டும் என்பதே சமுர்த்தி கொடுப்பனவின் நோக்கம். ஒவ்வொரு சமுர்த்திப் பயனாளியும் நல்ல நிலைக்கு வரவேண்டும். வறுமை மட்டத்தில் இருந்து விடுபட வேண்டும். அத்துடன் சமுர்த்திப் பயனாளிகளின் குடும்பத்தில் எவரேனும் மதுப் பழக்கத்திற்கு அடிமையாக இருந்தால் அந்தக் குடும்பத்திற்கான சமுர்த்திக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டு அது இன்னொரு குடும்பத்திற்கு மாற்றப்படும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-30)

# மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் விலங்கு விசர்நோய் தடுப்பூசி

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள வண்ணார்பண்ணை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV)கீழ்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம். இவ் வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக ரூபா.30 செலுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டு ள்ளது.

18.06.2019 மு.ப 9.00 பிறவுண் றோட் கலட்டி சந்தி ,மு.ப 11.00 வீரகத்தி பிள்ளையார் கோவிலடி சீனியர் ஒழுங்கை , பி.ப 2.30 காமாட்சி பாலர் பாடசாலை,19.06.2019 மு.ப 9.00 மெதடிஸ் மிஷன் பாடசாலை கலட்டி இராமநாதன் வீதி, மு.ப 11.00 சைவ பரிபாலன சபை நீராவியடி, பி.ப 2.30 ஆரோக்கியமாதா கோவிலடி சிவகுருநாதர் வீதி, 20. 06.2019 மு.ப 9.00 கனக சபை வீதி, மு.ப 11.00 சிவ குரு நாதர் கோவிலடி சிவகுரு நாதர் வீதி,பி.ப 2.30 குமாரசாமி வீதி G.S.Office , 21.06.2019 மு.ப 9.00 ஆத்திசூடி சனசமூக நிலையம், மு.ப 11.00 ஞானக் குழந்தை பாலர் பாடசாலை அரசடி வீதி ,பி.ப 2.30 கலாஜோதி சனசமூக நிலையம் ,24.06.2019 மு.ப 9.00 முருகமூர்த்தி வீதி, மு.ப 11.00 கலைவாணி சனசமூக நிலையம்,மு.ப 11.00 தாமரை வீதி,25.06.2019 மு.ப.9.00 பெரிய தம்பிரான் வீதி,மு.ப11.00 வள்ளுவன் சனசமூக நிலையம்,பி.ப2.30 கலைமகள் சனசமூக நிலையம் கே.கே. எஸ்,26.06.2019 மு.ப 9.00 பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கை,மு.ப 11.00 பிறவுண் வீதி 1 ஆம் ஒழுங்கை,பி.ப 2.30 அன்னச்சத்திர லேன் நாவலர் வீதி,27.06.2019 மு.ப 9.00 மணிக்கூட்டு ஒழுங்கை, மு.ப 11.00 சபாபதி ஒழுங்கை,பி.ப 2.30 பூநாறி ஒழுங்கை, 28.06.2019 மு.ப 9.00 பலாலி வீதி 4 ஆம் ஒழுங்கை, மு.ப 11.00 ஐயனார் கோவிலடி,பி.ப 2.30 அனைத்துப் பகுதிகளிலும் நடமாடும் சேவை இடம் பெறும். (5)




## ஒன்று கூடல்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் விசேட ஒன்று கூடல் நிகழ்வு நாளை 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10 மணியளவில் முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறும். (5)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் தென்மராட்சி பிரதேச கலாமன்ற மண்டபத்தில் நடைபெறும் என சாவகச்சேரிப் பிரதேச செயலாளர் திருமதி. தேவந்தினி பாபு அறிவித்துள்ளார். (5-10-114)

◆◆◆◆◆◆

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெறுமென மருதங்கேணி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (5)

# அனுமதி கிடைத்தும், பொலிஸ் அலுவலகம் அமைக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேசத்துக்குத் தனியான உப பொலிஸ் அலுவலகம் அமைப்பதற்கான அனுமதி கிடைத்து 1 வருடம் கழிந்தும் இதுவரை பொலிஸ் அலுவலகம் அமைக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

காரைநகருக்கெனத் தனியான பிரதேச செயலகமும், பிரதேச சபையும் நடைமுறையில் உள்ள நிலையில் பொலிஸ் நிலையம் மட்டும் ஊர்காவற்துறையில் இருப்பதால் குறித்த பகுதிகளில் இடம்பெறும் குற்றச் செயல்களையும்,சமூக விரோதச் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளதாகத் தெரிவித்தனர்.

பல்வேறு பிரயத்தனங்களுக்கு மத்தியில் காரைநகர் பிரதேசத்தில் பொலிஸ் காவலரண் அமைப்பதற்கான அனுமதி (2018) ல் கிடைக்கப் பெற்று ஒரு வருடமாகியும் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ் விடயம் தொடர்பில் காரைநகர் பிரதேச செயலாளரைத் தொடர்பு கொண்ட போது பொலிஸ் உப அலுவலகம் அமைக்கவெனத் தற்காலிகமாக வீடு ஒன்று இனம் காட்டப்பட்டும் பொலிஸார் அலுவலகம் அமைக்க முன்வரவில்லை எனத் தெரிவித்தார். (5-10)

# யாழ்.மாவட்ட நீர்ப்பாசன அபிவிருத்திக்கு 10 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்களைப் பாதுகாக்கும் நோக்கில் மாகாண விவசாய அமைச்சினால் 10 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட விவசாயத்தை விருத்தி செய்வதற்கும், நீர் வளத்தைப் பாதுகாப்பதற்கும் பல்வேறு செயற்றிட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

கடந்த காலங்களில் யாழ். மாவட்ட நீர்ப்பாசனத்துறை அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் புனரமைக்கப்பட்ட அபி விருத்தித் திட்டங்களைப் பாதுகாப்பதற்கும் சிறிய திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கும் என இந் நிதி ஒதுக்கப்பட்டது.

குறித்த நிதி ஒதுக்கீட்டில் வழுக்கை ஆறுத்திட்டம், தொண்டைமானாறு உவர் நீர்த்தடுப்பணை மற்றும் அரியாலை உவர் நீர் தடுப்பணை ஆகியவற்றின் பராமரிப்புக்கள் மேற் கொள்ளப்படவுள்ளதோடு வடமராட்சி கடல் நீரேரிப் பாதுகாப்பிற்கும் குறித்த நிதி செலவிடப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-10)

# 'பேண்தகு எதிர்காலத்தை நோக்கி' திண்ணையில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

"பேண்தகு எதிர்காலத்தை நோக்கி" எனும் தொனிப் பொருளில் யாழ்.முகாமையாளர்கள் அமையமும் "Share Colombo Services" அமைப்பும் இணைந்து யாழ் திண்ணை ஹோட்டலில் நடத்திய கலந்து ரையாடலின் சிறப்பு விருந்தினராக ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்து கொண்டார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இக்கலந்துரையாடலில் அமையத்தினூடாக வட மாகாணத்தில் மேற்கொள்ளக்கூடிய பேண்தகு அபிவிருத்தி திட்டங்களில் கூடிய கவனம் செலுத்துமாறு ஆளுநர்கோரிக்கை விடுத்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட மாகாணமாக வடமாகாணம் காணப்படுவதால் இங்கு வாழும் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் காணியில்லா மக்களுக்கு காணிகளை வழங்குவதற்கும் நீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கான ஆரம்ப அடியினை எடுத்து வைப்பதற்கும் முன்னுரிமையளித்து செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டதுடன் இதனுடன் தொடர்புபட்ட துறைகளுக்கு தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குவதற்கு முன்வருமாறும் கோரிக்கை விடுத்தார்.(5)

# யாழ்.நாகவிகாரையில் பொசன் விழா



(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக, யாழ். மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் பொசன் நிகழ்வுகள் நேற்று முற்பகல் யாழ்.நாகவிகா ரையில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வில், நாகவிகாரை விகாராதிபதி ஸ்ரீவிமல தேரா வழிபாடுகளை ஆரம்பித்து வைத்தார்.



இதன் பின்னர், அரசாங்க அதிபர் வேதநாயகன் தேரர்களுக்கு தானம் வழங்கினார்.

இந் நிகழ்வில், யாழ்.மாவட்ட செயலக அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (இ-101)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## நவீன முறையில் புனரமைக்கப்பட்ட பொது மலசலகூடங்களை சுத்தம் செய்து பராமரிக்கும் சேவையை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2019 (01.07.2019-30.06.2020)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மலசலகூடங்களை சுத்திகரித்து பராமரிக்கும் சேவையை 01.07.2019ஆம் திகதி முதல் 30.06.2020ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

**கேள்விப் படிவக் கட்டணம்:- ரூபா 1,000.00 (வரி நீங்கலாக)**

**கேள்விப் படிவம் விநியோகித்தல்:-14.06.2019 தொடக்கம் 27.06.2019 வரை (மு.ப 9.00- பி.ப.3.00 மணி வரை)**

**கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல்: - 27.06.2019 (பி.ப.3.30 மணிவரை)**

**கேள்வி திறத்தல்:- 28.06.2019. மு.ப 10.00 மணிக்கு**

விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பொது மலசல கூடங்களை சுத்திகரித்து பராமரிக்கும் சேவை" எனக் குறிப்பிடப்பட்டு மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 27.06.2019 ஆம் திகதி பி.ப 3.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

**நியந்தனைகள் :**

1. சித்திபெற்றவர்கள் உடனடியாக கேள்வித்தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை தவணைக்கட்டணாங்களாக 2019ஆடி மாதம் தொடக்கம் 2020 மாசி மாதம் வரையான 8 மாத காலப்பகுதிக்குள் ஒவ்வொரு மாத தவணைக்கட்டணத்தையும் அடுத்தமாதம் 10ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும். தவறும் பட்சத்தில் மாத குத்தகைப் gz j j p ; 10% தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும்.
2. கேள்விப்படிவத்தினைப் பெறுபவர் அவரது வதிவிடத்தை கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர் மூலம் உறுதிப்படுத்திய கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை நேரடியாக சமர்ப்பிப்பதுடன் அதன் புகைப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள், மாநகரசபைக்கு எந்தவித நிலுவைக் கட்டணங்களையும் முன்னைய காலங்களில், நடப்பு ஆண்டில் செலுத்த தவறியவர்களாக அல்லது கறுப்பு நிரல் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருந்தால், கேள்வியில் சித்தி பெற்றாலும் அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது.
4. அதிகூடிய கேள்வித் தொகையை சமர்ப்பிப்பவர்களுக்கே குத்தகை வழங்கப்படும். அதிகூடிய கேள்வித் தொகையை சமர்ப்பித்தவர் குத்தகையை எடுக்கத் தவறின், அடுத்த நிலையிலுள்ள கேள்விதாரரின் கேள்வித்தொகை திருப்திப்படக்கூடிய வகையில் அமைந்தால் பரிசீலிக்கப்படலாம்.
5. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை என்பவற்றுக்கு அக்காலப் பகுதிக்குரிய VAT, NBT என்பன சேர்த்துச் செலுத்துதல் வேண்டும்.
6. பொது மலசலகூடங்கள் தற்போது இருக்கும் நிலையிலேயே குத்தகைக்கு வழங்கப்படும். அதனை சித்திகர கேள்விதாரர் பார்வையிட்ட பின்னர் திருப்தி கொண்டே ஒப்பந்தம் செய்ததாக கருத்தில் கொள்ளப்படும்.
7. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை காரணங்காட்டாது ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணம் மாநகரசபைக்கே உரியது.
8. பொது மலசல கூட பாவனைக்கட்டணமாக பற்றுச்சீட்டு ஒன்றிற்கு ரூபா 10.00 அறவிடப்படலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடப்படலாகாது.

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## நவீன முறையில் புனரமைக்கப்பட்ட பொது மலசலகூடங்களை சுத்தம் செய்து பராமரிக்கும் சேவையை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2019

இதன் கீழ் குறிப்பிட்ட சுத்திகரிப்பு சேவையை 01.07.2019 - 30.06.2020 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்.மாநகர சபையால் கோரப்படுகின்றன.

**கேள்விப்படிவக்கட்டணம் ரூபா 1,000.00 (NBT, VAT நீங்கலாக)**

**கேள்விப் படிவம் விநியோகித்தல்:- 14.06.2019 தொடக்கம் 27.06.2019 வரை (மு.ப 9.00- பி.ப.3.00 மணிவரை)**

**கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல்:- 27.06.2019 பி.ப 3.30 மணிவரை**

**கேள்வி திறத்தல்:- 28.06.2019. 10.00 மணிக்கு**

| விபரம் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|
| நவீன சந்தை; கீழ்த்தளம் 04 Set<br>1. 14'-0" X 9' 6"<br>2. 09'-6" X 6' 0"<br>3. 20'-0" X 9'-6"<br>4. 20'-3" X 9'-6" | 10,000.00 | 1,000,000.00 |
| சொங்குந்தா சந்தை கீழ்த்தளம் 01 Set<br>5. 34'-0" X 21' -0" | 10,000.00 | 200,000.00 |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(C-6679)

# இலங்கையின் முதலாவது செய்மதி திங்கள் விண்ணுக்கு செலுத்தப்படும்

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது செய்மதி நாளை மறுதினம் திங்கட்கிழமை விண்ணுக்கு செலுத்தப்படும்.

இலங்கை தொழில்நுட்பவியலாளர்களால் நிர்மாணிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது செய்மதியாக இது கருதப்படுவதாக ஆதர் சீ கிளார் மத்திய நிலையம் தெரிவித்தது. இது புவியில் இருந்து 400 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள விண்ணுக்கு இலங்கை நேரப்படி பிற்பகல் 3 மணிக்கு செலுத்தப்படும்.

ஜப்பானின் தொழில்நுட்ப உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட இதற்கு ராவணா-1 என பெயரிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பகிஷ்கரிப்பு முடிவுக்கு

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தேசிய ஊழியர்கள் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட இ.போ.ச. பேருந்து சேவை பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டதாக தேசிய ஊழியர்கள் சங்கத்தின் பிரதித் தலைவர் சுனில் டி சில்வா தெரிவித்தார்.

கடந்த 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு தொடர்பில் பிரதமர் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையையடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (இ-7)

## 70 ஆவது பிறந்தநாளும் 50 ஆவது திருமண நாள் வாழ்த்தும்




கந்தன் இரத்தினம்
இரத்தினம் இந்திராணி

இன்றுபோல் என்றும் இன்புற்று
இனிதாய் நோய் நொடி ஏதுமின்றி
வாழ்க வாழ்கவென
வாழ்த்தி வணங்குகின்றோம்

உரும்பிராய்,
தெற்கு, உரும்பிராய்.

வாழ்த்துவோர்
மகன்:- இ.மோகன் (திருமலை)
மருமகள்:- R.கலீஞ்சனா
பேரன்:- R.மதுஸ்ரன்

(9120)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 3
கி.பா: 30 செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: சொந்தொழில்
எதிர்பார்ப்பு: படித்தபெண்
தொ.இ: B/9785

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 2
கி.பா: 94செவ் 1 இல்
தகைமை/தொழில்:A/L, Dip.QS,அரசதொழில்
எதிர்பார்ப்பு: படித்த,தொழில்புரியும் பெண் (உள்நாடு)
தொ.இ: B/9786

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அத்தம் 1
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:HNDA Following, தனியார்தொழில்
எதிர்பார்ப்பு: அரசதொழில் /வெளிநாடு
தொ.இ: B/9787

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரேவதி 1
கி.பா: 49 செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:Dip.in IT, தனியார் தொழில், Italy PR
எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/9788

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா: 25
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BAபட்டதாரி,பதிவாளர்
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம்
தொ.இ: G/5382

பிறப்பு: 1984 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: அவிட்டம் 2
கி.பா: 5 ¾
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:B.Sc, CIMA, Accountant - Canada PR
எதிர்பார்ப்பு:தகமைக்கேற்ப(உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: G/5390

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 1
கி.பா: 17 ¼
உயரம்: 158cm
தகைமை/தொழில்:B.Sc, M.Sc பட்டதாரி ஆராய்ச்சி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி (உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: G/5391

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 15 ½
தகைமை/தொழில்: பட்டதாரிஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகத்தர் (உள்நாடு)
தொ.இ: G/5394

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சூழலுக்கிசைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–175

## 2030ஐ நோக்கிய பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 189

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

ஐக்கிய நாடுகள் தாபனத்தினால் (United Nations) பல நாடுகள் இணைந்து ஆற அமர இருந்து கலந்தாலோசித்து, ஆய்வுக்குட்படுத்தி அனைவரும் ஏற்றுக்கொண்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் (Sustainable Development Goals- SDGs) எமது தேசத்தில் எமது பிரதேசத்தில் எந்தளவிற்கு மனித வாழ்வியலை வழி நடத்திச் செல்லும் என்பதனை அலசி ஆராய முற்பட்டிருக்கின்றோம்.

2015 செப்டெம்பரில் ஐக்கிய நாடுகளின் சபையின் 193 உறுப்பு நாடுகள் இணைந்து 17 பேண்தகு அபிவிருத்திக்கான இலக்குகளை இனங்கண்டு அதனை 2030 ஆம் ஆண்டிற்குள்நிறைவேற்றுவதாக உறுதிமொழியெடுத்துள்ளனர்.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் தோற்றுவாய் என்பது 2030 ஆம் ஆண்டளவில் ஏற்படப்போகும் மாற்றங்களை உள்வாங்குவதற்கான முன்னோக்கிய செயற்பாடாக கருத்திற் கொண்டாலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள 17 இலக்குகளைப் பற்றி மக்களுக்கு எந்தளவில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது என்பதனை முதலில் கருத்திலெடுக்க வேண்டும்.

மக்கள் மயப்படாத எதுவும் வெற்றியளித்ததாக சரித்திரமில்லை என்பதுடன் மக்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு அவர்களையும் இத்திட்டத்திற்குள் உள்வாங்கினாலன்றி இது வெற்றியளிக்காது. அந்தவகையில் அபிவிருத்தி இலக்குகளை 17 பகுதிகளாக பிரித்து அவற்றுக்கான செயற்றிட்டங்களும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

1. வறுமையை இல்லாதொழித்தல் (No Poverty)

2. பூச்சியபட்டினி (Zero Hunger)

3. தரமான சுகாதாரம் மற்றும் நலவாழ்வு (Good Health and wellbeing)

4. தரமான கல்வி (Quality Education)

5. பாலியல் சமத்துவம் (Gender Equality)

6. சுத்தமான நீர் மற்றும் துப்புரவு (Clean water and Sanitation)

7. மலிவான மற்றும் சுத்தமான சக்தி (Affordable and Clean Energy)

8. கௌரவமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி (Decent work and Economic Growth)

9. தொழிற்சாலை,புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு (Industry, Innovation and Infrastructure)

10. குறைக்கப்பட்ட சமநிலையின்மை (Reduced Inequalities)

11. பேண்தகு நகரங்களும் சமூகங்களும் (Sustainable cities and Communities)

12. பொறுப்பான உணவுண்ணலும் உற்பத்தியும் (Responsible consumption and Production)

13. காலநிலை நடவடிக்கை




(Climate Action)

14. நீருக்கடியிலான வாழ்க்கை (Life below water)

15. நிலத்தின் மேலான வாழ்க்கை (Life on Land)

16. சமாதானம், நீதி மற்றும் இறுக்கமான நிறுவனங்கள் (Peace, Justice and Strong Institutions)

17.இலக்குகளை அடைவதற்கான கூட்டுறவு (Partnerships for Goals)

மேலே கூறப்பட்டுள்ள பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் பற்றி பல கலந்துரையாடல்கள் நடைபெற்றிருக்கின்றன. இதில் எங்களிடம் உள்ள வளங்களை வைத்துக்கொண்டு எவ்வாறு இத்தகைய இலக்குகளை அடைய முடியும் என்பது பற்றிய விளக்கங்கள் இனிவரும் காலங்களில் விரிவாக ஆராயப்படும்.

ஐக்கிய நாடுகள் தாபனத்தினால் வரையறுக்கப்பட்ட இவ்விலக்குகளை அடைவதற்கு எமக்குள்ள வசதி வாய்ப்புக்கள் மற்றும் வழிகள் இன்னும் அவற்றின் வெளிப்பாடு என்பன பற்றி நாமும் எமக்குள்ளே கலந்துரையாடி அவரவருக்கேற்ற வகையில் இவற்றை அணுகுதல் வேண்டும். மாறாக ஒருவரின் கருத்துக்களை மற்றையவர் மேல் திணிக்கக்கூடாது. இத்தகைய பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் எமக்கு எவ்வகையில் சாதகமான மாற்றங்களைக் கொண்டுவரப்போகின்றன என்பது பற்றி மக்களுக்கு விரிவாக விளக்க வேண்டிய கடமை எமக்குண்டு என்ற வகையில் இவை பற்றி விளக்கமாக தொடர்ந்து உங்களுக்கு தரப்படும். இவை பற்றிய சந்தேகங்களை இவற்றின் வெளிப்பாடுகளை நீங்களும் எமக்கு அறிவிக்கலாம்.

வலம்புரியின் ஆசிரியருக்கு எழுதும் உங்கள் கருத்துக்களுக்கான பதில்கள் இக்கட்டுரையிலேயே தரப்படும்.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை எமது நாட்டில் வரையறை செய்திருக்கின்றார்கள். எமது வளங்கள் மற்றும் வசதி வாய்ப்பிற்கேற்ப இந்த இலக்குகள் செம்மைப்படுத்தப்பட்டுள்ளன. எமது பிரதேசத்தை அடிப்படையாக வைத்தும் இவ்வாறான இலக்குகளை மையப்படுத்தலாம். இவற்றினை தொடர்ந்து கண்காணிப்பதற்கான பொறிமுறையை உருவாக்கி விட்டால் பின்பு நாம் எதிர்பார்த்த விடயங்கள் நடந்தேறி விடுவதை அவதானிக்கலாம்.

2015ஆம் ஆண்டு 193 நாடுகளின் தலைவர்கள் ஒன்றுகூடி தத்தமது நாடுகளில் காணப்படும் பஞ்சம், பட்டினி, கிடைக்கும் தரமான நீர், சுகாதாரம் என பலவற்றை அலசியாராய்ந்ததில் முக்கியமான விடயம் ஒன்று புலப்பட்டது.

முன்னைய காலங்களை விட 2015இல் மேற்கூறிய பிரச்சினைகள் குறையத் தொடங்கியிருந்தது அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது. எமது திட்டமிட்ட செய்கைகளால் இவற்றை நிவர்த்திக்கலாம் அல்லது அவற்றின் கிடை தன்மையை உறுதி செய்து கொள்ளலாம் என்னும் முடிவுக்கு வந்தனர்.

இந்த மாற்றமே பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை இனங்காணவும் நடைமுறைப்படுத்தவும் கால்கோளானது. 17 இலக்குகளும் நிர்ணயஞ் செய்தபின் அவற்றின் கால அளவை 15 ஆண்டுகளாக வரையறை செய்தனர். 2015 இலிருந்து 2030 வரையான காலப் பகுதியாக நிர்ணயிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளுக்காக அபிவிருத்தி திட்டங்கள் (United Nations Development Programmes) வரையறை செய்ததன் படி 2030 என்பது அனைத்து இலக்குகளையும் முடிவுறுத்தும் ஆண்டாக அமையும் என எதிர்பார்த்திருக்கின்றேம். இத்தகைய இலக்குகளை மக்கள் பங்களிப்பின்றி சுலபமாக நடைமுறைப்படுத்த முடியாது. அனைத்து நிலையிலுமுள்ள மக்களும், அரச மற்றும் அரசசார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களும், இதில் உள்வாங்கப்படல் வேண்டும். இச்சமூகத்தின் நல்வாழ்க்கையில் கரிசனை கொண்டவர்கள் பக்கபலமாக இருந்து பரிந்துரைகளை, புதிய கண்டுபிடிப்புகளை, புதிய முறைகளை உருவாக்கி அவற்றுக்கான சரியான அடையாளங்கள் தரப்பட்டால் நீங்களும் இத்திட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

# முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான இனப்பாகுபாடு நிறுத்தப்பட வேண்டும்

## மனிதவுரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை

(கொழும்பு)

**முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக சில உள்ளூர் அதிகாரிகள் இனப்பாகுபாடு காட்டுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்தது.**

சட்ட ரீதியாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் முஸ்லிம்களுக்கு பொது இடங்களில், முக்கியமாக வார கிராம சந்தைகளில் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு உள்ளூர் அதிகாரிகளால் குறிப்பிட்ட முஸ்லிம்கள் உரிய பதிவை மேற்கொண்டும் கட்டணத்தைச் செலுத்திய பின்னரும் அவர்களுக்கு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு மறுப்பு தெரிவிக்கப்படுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இவ்விடயம் இலங்கை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்தது. குறிப்பாக இந்த வகையில் ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம்களுக்கு வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவதில் சிரமங்கள் இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தொடர்பாக அனைத்து உள்ளூராட்சி ஆணையாளர்களிடமிருந்தும் மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கை கோரியுள்ளது. (இ-7)

## கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்





இந்து பௌத்த கலாசார பேரவையின் ஏற்பாட்டில் இரண்டாம் மொழி கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அத்துரலிய ரதன தேரர் டிலான் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# குண்டுத் தாக்குதலுக்கான பொறுப்பை அரச அதிகாரிகளே ஏற்க வேண்டும்

## வீரகுமார கூறுகிறார்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் முழுப் பொறுப்பையும் அரசாங்க அதிகாரிகளே ஏற்றுக்கொள்ள வேண்டுமென மைத்திரி அணி நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்த முழுப் பொறுப்பையும் கட்டாய விடுமுறை அளிக்கப்பட்ட பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

தற்கொலைத் தாக்குதல் குறித்து பொலிஸ்மா அதிபருக்கு தகவல்கள் முன்கூட்டியே கிடைக்கப் பெற்றன.

சீருடைகளைக் களைந்து விட்டு 119 என்ற பொலிஸ் அவசர அழைப்பு இலக்கத்திற்கு அறிவித்திருந்தால் அதன் அடிப்படையில் பொலிஸார் செயற்பட்டிருப்பார்கள்.

தபான வீதிக் கோவையின் அடிப்படையில் அரசாங்க அதிகாரிகளுக்கு சில பொறுப்புக்கள் காணப்படுகின்றன. இந்தப் பொறுப்பை மீறினால் குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் தண்டனை வழங்க முடியும்.

எனவே, இச் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)

## உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு

# ஜனாதிபதி மீது அரச அதிகாரிகள் பழிசுமத்துவதை ஏற்க முடியாது

## துமிந்த எதிர்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மட்டுமல்ல யாராக இருந்தாலும் அமைச்சரவையைக் கூட்டாதது தவறுதான். ஆனால், அதற்காக உரிய நேரத்தில் கடமைகளை செய்திருக்க வேண்டிய அரச அதிகாரிகள் ஜனாதிபதி மீது மாத்திரம் பழி சுமத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.


உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு பாதுகாப்பு அதிகாரிகளும் பொறுப்பேற்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க எம்.பி தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமனத்தில் தலையிடாவிட்டாலும் அதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் அறிந்து கொள்வதற்கும், குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதிலும் மக்கள் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

அதற்காக புலனாய்வு தகவல்களை ஊடகங்களில் வெளிப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தீயை மூட்டி விட்டு தற்போது வேடிக்கை



பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளால் அமைச்சரவை கூடாமல் இருப்பது மக்களையே பாதிக்கும்.

எனவே பிரதமரும், ஜனாதிபதியும் சுமுகமான கலந்துரையாடலின் மூலம் அமைச்சரவை தொடர்பான சர்ச்சைக்கு முடிவு காண வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் முஸ்லிம்களுக்கு எதிரான அநீதிக்காக குரல்கொடுக்க வேண்டும் - ஹரீஸ்

(கொழும்பு)

தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் முஸ்லிம் சமூகத்தின் குறைகளை மாத்திரம் விமர்சித்துக்கொண்டிருக்காமல் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அநீதிக்காகவும் குரல்கொடுக்க முன்வர வேண்டும்.

இனங்களுக்கிடையில் பரஸ்பர நல்லுறவு இருந்தால்தான் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பலாம் என பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் முஸ்லிம்கள் தொடர்பாக கடைப்பிடித்துவரும் நடவடிக்கை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் தென்னிலங்கை அரசியல் தலைமைகளின் பேச்சுக்கள் முஸ்லிம் மக்களுக்கு அறிவுரை சொல்வதிலும் அவர்களின் கலாசாரம் மற்றும் ஆடைகள் தொடர்பாக விமர்சிப்பதிலுமே இருக்கின்றன.

ஆனால் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் கெடுபிடிகள் தொடர்பாக குரல்கொடுப்பதை மிகவும் குறைவாகவே பார்க்கின்றோம். இது மிகவும் துர்ப்பாக்கியமான நிலையாகும்.

ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் ஞானசார தேரர் போன்றவர்களின் நடவடிக்கைகளை எதிர்த்து குரல்கொடுக்கும் தலைமைகள் தெற்கில் இருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா போன்றவர்கள் முஸ்லிம்களுக்கு எதிரான அநீதிகளை எதிர்த்துப் பேசக்கூடிய



வர்களாக இருந்தார்கள்.

ஆனால் இப்போது இவர்களும் முஸ்லிம்களின் செயற்பாடுகள் நடை உடைகளில் குறை காண்பதிலே இருக்கின்றனர்.

இது முஸ்லிம் சமூகத்துக்கு ஒருவகையில் மன அழுத்தத்தைக் கொடுக்கும் வகையிலே இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## குண்டுத் தாக்குதல்; மில்ஹான் உட்பட ஐவர் டுபாயில் கைது

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய மொஹமட் மில்ஹான் உட்பட ஐந்து பேர் டுபாயில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரும் நேற்று முன்தினம் இரவு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின் பின்னர் 500 இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மன்னார் தள்ளாடி
# அந்தோனியார் ஆலய திருவிழா



மன்னார் மறைமாவட்டம் தள்ளாடி தூய அந்தோனியார் ஆலய திருநாள் திருப்பலி நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை அருட்தந்தை ஜெயபாலன் அடிகளார் தலைமையில் திருவிழா திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (7-9-285)

# மன்னார் மனித புதைகுழி விவகாரம்
## தொல்லியல் திணைக்களத்தை உள்ளீர்க்க கோரிக்கை

மன்னார் பிரதான பாலத்திற்கு அருகில் சதொச வளாகம் அமைப்பதற்கு என அகழப்பட்ட மண்ணில் இருந்து சந்தேகத்திற்கு இடமான மனித எச்சங்கள் மீட்கப்பட்டதை தொடர்ந்து குறித்த சதொச வளாகத்தில் ஒரு வருடத்திற்கு மேலாக அகழ்வுப் பணிகள் இடம் பெற்றன. குறித்த அகழ்வுப் பணிகளின் போது சுமார் 318 இற்கு மேற்பட்ட மனித எச்சங்கள் மீட்கப்பட்ட நிலையில் குறித்த மனித எச்சங்கள் எந்த காலப் பகுதிக்கு உரியவை என கண்டறிவதற்காக மனித எச்சங்கள் அமெரிக்காவில் உள்ள புளோரிடா ஆய்வு கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் ஆய்வு முடிவுகளில் குறித்த எலும்புகள் 500 வருடங்களுக்கு மேற்பட்டவை என குறிப்பிடப்பட்டதை தொடர்ந்து இம்முடிவுகள் சம்பந்தமாக பலரும் சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் கடந்த 22.03.2019 இடம்பெற்ற உயர் மட்ட கலந்துரையாடலில் குறித்த புதைகுழி அகழ்வுப் பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதுடன் குறித்த மனித புதைகுழி பகுதியில் காணப்படும் மண் படைகள் மற்றும் ஏனைய சாதகபாதக தன்மைகள் தடயப்பொருட்கள் தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை ஒன்றினை வழங்குமாறு களனி பல்கலைக்கழக பேராசிரியர் ராஜ் சோமதேவிடம் கோரப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மன்னார் பொலிஸார் குறித்த புதைகுழி தொடர்பாக நகர்தல் பிரேரணை ஒன்றை முன்வைத்தனர். இதன் மூலம் மன்னார் மனித புதைகுழியானது 500 வருடங்களுக்கு மேற்பட்டதாக காணப்படுவதாக அறிக்கை கிடைக்கப்பெற்றமையினால் அகழ்வுப் பணிகள் தொடர்பாக இலங்கை தொல்பொருள் திணைக்களத்தை உள்ளீர்ப்பது தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந் நிலையில் தொல்லியல் திணைக்களத்தை உள்ளீர்ப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதுடன் மன்னார் மனித புதைகுழி தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமாக தீர்மானங்கள் மேற்கொள்வதற்காக இம்மாதம் 27 ஆம் திகதி விசேட கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த வழக்கை விசேட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்ட தினத்திற்கு திகதியிட்டு வழக்கானது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. குறித்த விசேட கூட்டத்திற்கு விசேடமாக தொல்லியல் திணைக்களமும் அழைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-9-285)

# தியாகிகள் தினம் எதிர்வரும் 19ம் திகதி

(மன்னார்)

ஈழ மக்கள் புரட்சிகர முன்னனியின் ஸ்தாபகர் தோழர் பத்மநாபாவின் 29 ஆவது ஆண்டு தியாகிகள் தினம் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை வடக்கு-கிழக்கில் மிகவும் அமைதியான முறையில் நினைவு கூரப்பட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் பொருளாளரும் மன்னார் மாவட்டஅமைப்பாளருமான எஸ்.ஆர்.குமரேஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தியாகிகள் தினம் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை வடக்கு- கிழக்கில் மிகவும் அமைதியான முறையில் நினைவு கூரப்பட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வடக்கு-கிழக்கும் மற்றும் புலம்பெயர்ந்தநாடுகளில் தியாகிகள் தினம் நினைவு கூரப்படுகின்றமை வழமை.

எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலையினைக் கருத்தில் கொண்டு தியாகிகள் தினமானது வடக்கு, கிழக்கில் உள்ள மாவட்டங்கள் தோறும் ஈழ மக்கள் புரட்சிகர முன்னனியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) கட்சியின் அலுவலகங்களில் தோழர்கள், ஆதரவாளர்களை ஒன்றிணைத்து தியாகிகள் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. மாவட்ட பொறுப்பாளர்களின் தலைமையில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நினைவு கூரப்படவுள்ளது.

குறித்த தியாகிகள் தின நினைவு நிகழ்வானது யாழ்ப்பாணத்தில் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன், வவுனியாவில் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன், கிளிநொச்சியில் கட்சியின் உப செயலாளரும் முன்னாள் வடமாகாண கல்வி அமைச்சருமான சர்வேஸ்வரன், மட்டக்களப்பில் கட்சியின் உப தலைவர் துரைரெட்ணம், மன்னாரில் கட்சியின் பொருளாளர் எஸ்.ஆர். குமரேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வு அனைவரும் கலந்துகொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (7-9-285)

# அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக வவு.வைத்தியர்கள் ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவிற்கு எதிராக வவுனியா வைத்தியசாலையில் கண்டன ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. மாவட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரால் வவுனியா பொது வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியும் வைத்தியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன நாட்டின் சுகாதார சேவைக்கு மிகப்பாதகமான முறையில் நடந்துகொள்வதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் மட்டத்தில் அதிகமான பிணக்குகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். இதன் காரணமாக அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் அமைச்சரின் குடியுரிமை பறிக்கப்பட வேண்டும் எனவும் கோரியிருந்தனர். (7-9-250)

# போதை ஒழிப்பு செயலமர்வு





(குருமன்காடு)

வவுனியா அல்-இக்பால் மகா வித்தியாலயத்தில் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பில் செயலமர்வு நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதியின் விசேட செயற்திட்டத்தின் கீழ் இடம்பெறும் போதை ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு அங்கமாக குறித்த பாடசாலைமாணவர்களுக்கு போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கருத்தமர்வு இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் உபைத் தலைமையில் நடைபெற்ற இச் செயலமர்வில் வெண்கல செட்டிகுளம் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் இளஞ்சிங்கம், உலுக்குளம் பொலிஸார் ஆகியோர் இணைந்து இந்த போதை ஒழிப்பு கருத்தமர்வை நடத்தியிருந்தனர். (7-9-250)





# இறம்பைக்குளத்தில் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிகள் இடைநிறுத்தம்



(குருமன்காடு)

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் மற்றும் மயானத்திற்கு அருகில் தனியார் தொலைத்தொடர்புநிறுவனத்தினால் அமைக்கப்பட்ட தொலைத்தொடர்புக் கோபுரப் (ரவர்) பணிகள் மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாகநேற்று இடைநிறுத்தப்பட்டுள்ளது. வவுனியா இறம்பைக்குளம் மயானத்திற்கு அருகில் புதன்கிழமை தனியார் நிறுவனம் ஒன்றினால் வீதிக்கு அருகில் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதையறிந்த அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து குடியிருப்பு, பாடசாலை, ஆலயம், மயானத்திற்கு அருகில் அமைக்கப்படும் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிக்கு தமது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளதுடன் கட்டட ஒப்பந்தப்பணியாளர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். பின்னர் நகரசபையின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டு செல்லப்பட்டுடு தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

நகரில் பல்வேறு பகுதிகளில் இவ்வாறான கோபுரங்களை அமைத்து எதிர்காலத்தில் அவற்றை தொலைத் தொடர்புக் கோபுரம் போன்று பாவிப்பதற்கு குறித்த நிறுவனம் முயற்சித்துள்ளதாக மக்கள் குற்றச்சாட்டினை முன்வைத்து தமது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து நகர சபையினால் இத்திட்டம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. எனினும் நகர சபையின் அனுமதிக்கான விண்ணப்பம் குறித்தத னியார் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது அனுமதி பெற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 19அடி உயரமும் 15 அடி அகலத்திலும் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிகள் இடம்பெற்றுவந்துள்ளன. இதையடுத்து அப்பகுதி மக்களின் எதிர்ப்புக் காரணமாக நகர சபையினால் இப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-9-250)

# பாடசாலை வாசலில் படையினர் பாதுகாப்பை ஊர்ஜிதப்படுத்தாது




(குருமன்காடு)

, பாதுகாப்பை நாங்கள் தான் உறுதிப்படுத்த வேண்டும். பொலிஸோ, இராணுவமோ பாடசாலை வாசலில் நிற்பது எமது பாதுகாப்பை ஊர்ஜிதப்படுத்தாது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். வவுனியா சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை திறப்பு விழா நிகழ்வில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் எத்தனையோ போராட்டங்களை பார்த்தவர்கள். எங்களுடைய போராட்டம் என்பது இனரீதியான போராட்டமாகத் தான் பார்க்கப்பட்டது. இந்த உலகம் முழுதும் தங்களுக்கு வர வேண்டும். தங்களுடைய நாடாக மாற வேண்டும் என்ற சிந்தனையிலே செயற்படுகின்ற ஒரு செயற்பாடுகளை நாங்கள் அயல் நாடுகளிலே பார்த்திருக்கின்றோம். இப்பொழுது எங்களுடைய நாட்டிலே அது உருவெடுத்திருக்கிறது.

ஆகவே மக்களுடைய எண்ணிக்கை அதுவும் கூடுதலாக இந்தச் சம்பவங்களை வைத்து பார்க்கும் போது தமிழர்கள் தான் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆகவே எண்ணிக்கை என்பது மக்களுடைய பிணங்களை எண்ணி கணக்குப் பார்த்து சந்தோசப்படுகின்றது தான் இந்த தீவிரவாதத்தின் எண்ணம். ஆகவே நாங்கள் எங்களுடைய பாதுகாப்பை நாங்கள் தான் பார்க்க வேண்டும். அந்த விடயத்திலே நாங்கள் எல்லோரும் கவனமாக போகும் வழிகளில் பிள்ளைகளை, எல்லோரையும் கவனமாக நாங்கள் தான் பார்க்க வேண்டும். இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்கின்ற நாங்கள் இவ்வளவு இழப்புகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு நாங்கள் இந்த வாழ்க்கையை நடத்துகிறோம் என்றால் எங்கள் கடவுள் ஏதோ ஒரு வகையில் எங்களை விட்டிருக்கிறார் என்று சொன்னால் நாங்கள் நல்லதை செய்ய வேண்டும் என்பதற்காகவே.

எங்களுடைய இலட்சிய போராட்டம் என்பது, அதற்கான எல்லைகள் என்பது அல்லது கவனம் என்பது இன்றைக்கு பார்த்தவங்க இருந்தால் எவ்வளவு பிரச்சினை. ஆகவே சமூக ஒற்றுமை என்பது கட்டாயம் தேவை. எங்களுடைய மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும். ஆகவே பாதுகாப்பை நீங்கள் உறுதிப்படுத்துகின்ற செயற்பாட்டிலேயே அது பொலிஸ் பார்த்துக்கொள்ளும், இராணுவம் பார்த்துக்கொள்ளும் எங்களை சோதனை செய்யும்போது அது ஒரு விருப்பம் இல்லாமல் இருக்கின்ற ஒரு சூழல். ஆனால் எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்கின்ற ஒரு கட்டாய நிலைக்கு நாங்கள் வந்துள்ளோம் என மேலும் தெரிவித்தார். (7-9-250)




# பற்றி எரிந்த பனங்கூடல்



முல்லைத்தீவு செல்வபுரம் பகுதி மக்கள் குடியிருப்புக்கு அண்மையில் பனங்கூடலில் ஏற்பட்ட தீ பரவியதில் அதிகளவான பனைமரங்கள் எரிந்துள்ளதுடன் குடிமக்களின் உடைமைகள் சிலவும் எரிந்து சேதமடைந்துள்ளன.

செல்வபுரம் மக்கள் குடியிருப்புக்கு அருகில் உள்ள பனங்கூடலுக்குள் நேற்று முன்தினம் திடீரென பற்றிய தீ பனங்கூடல் முழுவதும் பரவியுள்ளது.

இந்நிலையில் இந்த தீவிபத்து தொடர்பில் அருகில் உள்ள மக்கள் பொலிஸார் மற்றும் படையினருக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த படையினர், பொலிஸார் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை ஊழியர்கள், மாவட்ட செயலக ஊழியர்கள் ஆகியோர் இணைந்து தீயினை அணைத்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வெப்பம் காரணமாக பனைமரக்கூடல்கள் அடிக்கல் தீபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-9-281)

# அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக வைத்தியர்கள் போராட்டம்



(பனிக்கன்குளம்)

சுகாதார அமைச்சர் ராஜித சேனராட்னவிற்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற வைத்தியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மாவட்ட பொது வைத்தியசாலை முன்றலில் நேற்று முன்தினம் பகல் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நீரிழிவு நோய்க்கு தரம் குறைந்த மருந்துகள் வேண்டாம்., ராஜித வேண்டாம், புற்று நோய்க்கு தரம் குறைந்த மருந்துகள் வேண்டாம், ஔடத அதிகாரத்தை மாபியாவிடத்தில் கையளிக்காதே, இலங்கை மருத்துவ சங்கத்திற்கு அரசியல் தலையீடு செய்யாதே, உள்ளிட்ட பல்வேறு வசனாங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் வைத்தியர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (7-9-281)

# முல்லைத்தீவில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இல்லாததால் சிரமங்களுக்குள்ளாகும் பண்ணையாளர்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளைஅமைப்பதில் இருக்கின்ற இடர்பாடுகள் காரணமாக பண்ணையாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் அமைக்கப்படா மையினால் பண்ணையாளர்கள் தங்களுடைய கால்நடைகளை பராமரிப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் அமைப்பதற்கு கடந்த 2015ஆம் ஆண்டில் அரச அதிபர் தலைமையில் 1100 ஏக்கர் மேய்ச்சல் தரவை இனங்காணப்பட்டதாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மன்னாகண்டல், உடையார் கட்டு போன்ற இடங்களில் மேய்ச்சல் தரவைகள் இனங்காணப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட போதும் திணைக்களம் ஒன்றால் அது பொருத்தப்பாடற்ற இடமாகக் காட்டப்பட்டு தடுக்கப்பட்டுள்ளது. கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின்கீழ் உள்ள குமுழமுனைப் பிரதேசத்தில் 500 ஏக்கர் நிலப்பகுதி அடையாளம் காணப்பட்டபோதும், இவற்றை அமைப்பதற்கான சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அனுமதிகளை வழங்காமையினால் கால்நடைக்களுக்கான மேய்ச்சல் தரவைகள் அமைக்க முடியாதிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-9-315)

# நொச்சிமுனை, காக்கைதீவு போன்ற பகுதிகளில் வெளிச்ச வீடு அமைக்குமாறு கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்துகுட்பட்ட நொச்சிமுனை, காக்கைதீவு போன்ற பகுதிகளில் கடற்தொழிலில் ஈடுபடும் கடற்தொழிலாளர்களுக்கு ஏற்ற வகையில் கரையோரப்பகுதிகளில் வெளிச்சவீடுகளை அமைத்துத் தருமாறு கிராஞ்சி சிறிமுருகன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்துக்குட்பட்ட கிராஞ்சி சிறிமுருகன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் உள்ள கடற்றொழிலாளர்கள் நொச்சிமுனை, இலவங்குடா, காக்கைதீவு, எருமைதீவு உள்ளிட்ட பகுதிகளில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இரண்டு இடங்களில் வெளிச்சவீடுகளை அமைத்துத் தருமாறு தெரிவித்த சங்க நிர்வாகம் தற்போது வீதிக்கு பொருத்துகின்ற சூரிய மின்கலத் தொகுதியுடன் கூடிய மின்விளக்கு ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

இதனுடைய உயரம் மிகக் குறைவாக இருப்பதனால் கடற்தொழிலாளர்களுக்கு சிரமங்கள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளதுடன் இப்பகுதியில் ஒரு வெளிச்ச வீடு ஒன்றினை அமைத்துத் தருமாறு மேற்படி நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது. (7-9-315)

# படையினரின் நடவடிக்கையால் வவுனியா வர்த்தகர்கள் பாதிப்பு

(குருமன்காடு)

ஈஸ்டர் தாக்குதல் காரணமாக ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையிலிருந்து மெல்லமெல்ல திரும்பிவரும் நிலையில் வவுனியாவின் பல பகுதிகளிலுள்ள படையினரின் சோதனை நடவடிக்கை காரணமாக வர்த்தகர்கள், பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.


வவுனியா வைத்தியசாலையிலுள்ள படையினர் அப்பகுதியில் வாகனங்களை நிறுத்துவதற்கும் தடை விதிக்கின்றனர். இதனால் நோயாளர்களைப் பார்வையிடச் செல்லும் உறவினர்கள், பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தலைக்கவசத்தையும் வெளியே வைத்துவிட்டு செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. நகர பள்ளிவாசலுக்கு முன்பாக உள்ள படையினரால் பள்ளிவாசலுக்கு முன்பாக உள்ள வியாபார நிலையத்திற்கு முன்னால் வாகனங்களை நிறுத்தவதற்கு தடை விதித்து வருகின்றனர். இதனால் குறித்த வியாபார நிலையங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் பொது மக்களின் வருகையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்கொலைத் தாக்குதல் நடைபெற்று இரண்டு மாதங்கள் ஆகின்ற நிலையிலும் வவுனியா நகரில் படையினரின் சோதனை நடவடிக்கைகள் குறைவடையவில்லை. வைத்தியசாலை, நகர பள்ளிவாசலுக்கு முன்பாக வீதியிலுள்ள படையினரால் வர்த்தகர்கள், பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-9-250)

# ஆவணவரி அறிமுக நிகழ்வு

ஆவணவரியை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. கரைச்சி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து ஆவண வரியை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை கரைச்சி பிரதேசசபையினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த ஆவணவரியை பெற்றுக் கொள்வதற்கான மதிப்பீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதை அடுத்து, ஆவண வரியை அறவிடுவதற்கான ஆரம்ப நிகழ்வு இன்று காலை 10 மணியளவில் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான த.குருகுலராஜா, வை.தவநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இதன்போது வரி அறவீட்டிற்கான விண்ணப்பப் படிவங்கள் கையளிக்கப்பட்டன. (7-9)



# பாரதம்

## இந்தியாவிற்கு தனி விண்வெளி மையம் 2030 ஆம் ஆண்டிற்குள் அமைக்கப்படும்

### இஸ்ரோ தலைவர் தெரிவிப்பு



(டில்லி)

இந்தியாவிற்கு என தனி விண்வெளி ஆய்வு மையம் எதிர்வரும் 2030ஆம் ஆண்டிற்குள் அமைக்கப்படும் என்று இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "நிலவிற்கு மனிதர்களை அனுப்பும் சுகன்யா திட்டமானது 2022 ஓகஸ்ட் மாதத்திற்குள் நிறைவேற்றப்படும்.

இந்த திட்டத்திற்காக அடுத்த 6 மாதங்களில் இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படும். அத்துடன் இதற்காக சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு தீவிர பயிற்சியளிக்கப்படும்.

2030ஆம் ஆண்டிற்குள் விண்வெளியில் இந்தியாவிற்கென தனியான ஆய்வு மையம் அமைக்கும் திட்டத்தினை நிறைவேற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (7)


## பா.ஜ.கவின் தேசிய தலைவராக அமித்ஷாவே தொடர்ந்தும் செயற்படுவார்

(டில்லி)

பா.ஜ.கவின் தேசியத் தலைவராக அமித்ஷாவே தொடர்ந்தும் செயற்படுவார் என மாநிலத் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க 303 இடங்களில் வெற்றி பெற அமித்ஷாவே காரணம் என்பதால் அவரே தலைவராக தொடரவேண்டும் என்று அனைத்து மாநிலத் தலைவர்களும் கோரியிருந்த நிலையில், அவரே தலைவராக தொடர்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பல்வேறு மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ளதால் அமித்ஷா தலைவராக செயற்படுவார் என்று கட்சி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.



மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் நேற்று முன்தினம் பா.ஜ.கவின் மாநில தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் பா.ஜ.கவின் தேசிய தலைவரை தெரிவு செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டதுடன், கட்சிக்கு புதிய தலைவர்களை சேர்ப்பது குறித்த ஆலோசனைகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## அமெரிக்காவின் குற்றச்சாட்டிற்கு ஈரான் வெளியுறவுத்துறை மறுப்பு

(தெஹ்ரான்)

அமெரிக்காவின் குற்றச் சாட்டிற்கு ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

ஓமான் வளைகுடாவில் எண்ணெய் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஈரான் அரசே பொறுப்பேற்க வேண்டும் என அமெரிக்க வெளியுறவு துறை செயலாளர் மைக் போம்பியோ தெரிவித்தார்.

ஓமான் வளைகுடா பகுதியில் சென்றுகொண்டிருந்த நோர்வேக்கு சொந்தமான ஃபுரொன்ட் அல்ரயர் கப்பலில் அடுத்தடுத்து மூன்று வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது என நோர்வே கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, சிங்கப் பூருக்கு சொந்தமான கொகுகா சரக்கு கப்பல் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. முதலில் தாக்குதலில் சிக்கிய நோர்வேக்கு சொந்தமான கப்பல் கடலில் மூழ்கியதாக ஈரான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்நிலையில், ஓமான் வளைகுடாவில் எண்ணெய் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஈரான் நாட்டு அரசே பொறுப்பேற்க வேண்டும் என அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மைக் போம்பியோ குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் இந்த குற்றச்சாட்டிற்கு ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சகம் மறுப்பு தெரிவித்துள்ளது. மேலும் அடிப்படை ஆதாரங்கள் ஏதுமின்றி அமெரிக்கா, தங்கள் மீது குற்றம் சாட்டுவதாக ஈரான் தெரிவித்துள்ளது. (7)

## சீனாவில் கன

## 61 பேர் உயி





## ஓமன் வளை

## இரண்டு எண்ணெய்


## மர்மமான முறை

(டுபாய்)

ஓமன் வளைகுடாவில் அடுத்தடுத்து இரண்டு எண்ணெய் தாங்கிகள் மீது மர்மமான முறையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஓமன் வளைகுடா பகுதியில் சென்றுகொண்டிருந்த நோர்வேக்கு சொந்தமான பிராண்ட் ஆல்டேர் தாங்கிக் கப்பலில் அடுத்தடுத்து மூன்று வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது என நோர்வே கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து, சிங்கப்பூருக்கு சொந்தமான சரக்கு கப்பல் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து இரண்டு கப்பல்களிலும்



இருந்த ஊழியர்கள் மற்றும் குழுவினர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். முதலில் தாக்குதலில் சிக்கிய நோர்வேக்கு சொந்தமான பிராண்ட் ஆல்டேர் கப்பல்

## எண்ணெய்க்கப்பல்கள்

## ஈரான் அரசு தான் பொ

### அமெ.வெளியுறவு அ

(வோஷிங்டன்)

ஓமன் வளைகுடாவில் எண்ணெய் கப்பல்கள் மீதான தாக்குதலுக்கு ஈரான் அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் போம்பியோ குற்றம் சாட்டியுள்ளார்.

ஓமன் வளைகுடா பகுதியில் சென்றுகொண்டிருந்த நோர்வேக்கு சொந்தமான பிராண்ட் ஆல்டேர் டேங்கர் கப்பலில் அடுத்தடுத்து மூன்று வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது என நோர்வே கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து, சிங்கப்பூருக்கு சொந்தமான சரக்கு கப்பல் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலை அடுத்து உலகளவில் எண்ணெய் விலை உயர்ந்தது. எண்ணெய் கப்பல்களை குறிவைத்து தாக்குதல் நடத்துவதன் மூலம்

# வெளிநாடு

## னமழை
## ரிழப்பு




(பீஜிங்)
சீனாவில் பெய்து வரும் கன மழையால் பாரிய நிலச்சரிவுகளும், வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டதில் 61 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.


தெற்கு மற்றும் வடக்கு சீனா பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக கடும் காற்றுடன் கன மழை பெய்து வருகிறது.

கடும் மழையினால் சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் இருப்பிடத்தை விட்டு வெளியேறியுள்ளதாகவும், 61 பேர் வரை உயிரிழந்துள்ளதாகவும் அந் நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு வெள்ளப்பெருக்கில் சிக்கி தவிக்கும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை மீட்கும் பணியில் அந்நாட்டு அதிகாரிகள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# ரோஹிஞ்யா முஸ்லிம்களை கடத்தும் முயற்சி அம்பலம்





(பர்மா)
மியன்மாரிலிருந்து மலேசியாவுக்கு 65 ரோஹிஞ்யா முஸ்லிம்களை கடத்த எடுக்கப்பட்ட முயற்சி, தாய்லாந்தின் தெற்கு கடல்பகுதியில் படகு விபத்துக்குள்ளானதன் மூலம் அம்பலமாகியுள்ளது.


இவர்களை கடத்துவதில் ஈடுபட்ட சங்கோம் பப்ஹான் என்னும் தாய்லாந்து படகோட்டி ஆட்கடத்தல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

2015 காலகட்டத்தில் பெரும் எண்ணிக்கையில் ரோஹிஞ்யா முஸ்லிம்கள், மற்றும் பங்களாதேசத்தவர்களை மலேசியாவுக்கு கடத்தும் முயற்சிகள் இதே கடல் பகுதியில் நடைபெற்றிருக்கின்றன.

இப்போது, மீண்டும் அதே வழித் தடத்தில் இக் கடத்தல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் மீட்கப்பட்டுள்ள குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட 65 ரோஹிஞ்யா அகதிகளும் சதுன் (Satun) மாகாண பொலிஸ் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (7)


## ளகுடாவில்
# ய் தாங்கிகள் மீது
# றயில் தாக்குதல்



கடலில் மூழ்கியதாக ஈரான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதே பகுதியில் கடந்த மே மாதம் சவுதிக்கு சொந்தமான 2 எண்ணெய் கப்பல்கள் உட்பட நான்கு எண்ணெய் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலை அடுத்து உலகளவில் எண்ணெய் விலை உயர்ந்தது. எண்ணெய் கப்பல்களை குறிவைத்து தாக்குதல் நடத்துவதன் மூலம் உலகளவில் எண்ணெய் விலை அதிகரிப்புக்கு வழி வகுக்கிறது. இந்த தாக்குதல் குறித்து செய்தி தங்களுக்கு வந்துள்ளதாகவும், இது குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமெரிக்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சந்தேகத்திற்குரிய தாக்குதல் குறித்து பிராந்திய பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என ஈரான் அழைப்பு விடுத்துள்ளது. (7)

# போலந்துக்கு மேலும் ஆயிரம் படையினரை அனுப்புவதற்கு அமெரிக்கா தீர்மானம்-ட்ரம்ப்



(வோஷிங்டன்)
போலந்திற்கு மேலும் ஆயிரம் படையினரை அனுப்ப அமெரிக்கா தீர்மானித்துள்ளது. போலந்து ஜனாதிபதி அன்ட்ரஸெஜ் டூடாவுடன் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இது குறித்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், 'ஜேர்மனியில் நிலைகொண்டுள்ள அமெரிக்காவின் 52000 படையினரை மீள அழைக்கத் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன், ட்ரோன் மற்றும் ஏனைய இராணுவக் கட்டமைப்புக்களை அங்கு நிலைநிறுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எனினும், ஜேர்மனியில் அமெரிக்க இராணுவத்தளம் ஒன்றை நிலையாக வைத்திருக்க வேண்டிய தேவை உள்ளது என மேலும் தெரிவித்தார்.(7)

# மீதான தாக்குதலுக்கு
# றுப்பேற்க வேண்டும்

## மைச்சர் குற்றச்சாட்டு



உலகளவில் எண்ணெய் விலை அதிகரிப்புக்கு வழி வகுக்கிறது.

இந்நிலையில், ஓமன் வளைகுடாவில் எண்ணெய் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஈரான் நாட்டு அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என அமெரிக்க வெளியுறவு துறை அமைச்சர் மைக் போம்பியோ குற்றம் சாட்டியுள்ளார். (7)

# அமெரிக்க - ரஷ்ய உறவில் மேலும் விரிசல் ஏற்பட்டுள்ளது

## ஜனாதிபதி புடின் சுட்டிக்காட்டு



(மொஸ்கோ)
மொஸ்கோவிற்கும் வோஷிங்டனுக்கும் இடையிலான உறவுகள் இன்னும் மோசமடைந்து வருவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக தற்போதைய அமெரிக்க நிர்வாகம் ரஷ்யா மீது பல பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளமையும் அதற்கு காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.


இது குறித்து ஊடகம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த மாத இறுதியில் ஜப்பானில் நடைபெறும் G20 உச்சி மாநாட்டிற்கு முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்திக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சிரியாவிலிருந்து உக்ரேய்ன் வரை அனைத்து விடயங்களிலும் அமெரிக்க - ரஷ்யா உறவில் விரிசல் இருப்பதாகவும் தெரிவித்த அவர் ஆனால் அமெரிக்க அரசியலில் ரஷ்ய தலையீடு தொடர்பான குற்றச்சாட்டுகளை மறுப்பதாக மேலும் தெரிவித்தார். (7)

# நாட்டுப்பற்றுள்ள சக்திகளுடன் இணைந்து செயற்படத் தயார்

## கபீர் ஹாசிம் தெரிவிப்பு



(கொழும்பு)

முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியதை பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பவாத அரசியலை வன்மையாக கண்டிப்பதாக முன்னாள் அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார். மகாசங்கத்தினரின் வழிகாட்டல்களை ஏற்று அவர்களின் ஆலோசனைப்படி எதிர்காலத்தில் செயற்படத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியது தொடர்பில் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் மற்றும் விமர்சனங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரி நாட்டில் ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலை மாறி வரும் நிலையில் கடந்த 3 ஆம் திகதி காலை முதல் நாடு பூராகவும் கடும் ஸ்திரமற்ற நிலையும் மோதல் உருவாகும் போக்கும் காணப்பட்டதை அவதானித்தேன். இந்த நிலையில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் மூன்று விடயங்களின் அடிப்படையில் அமைச்சுப் பதவிகளை கைவிட முடிவு செய்தனர்.

சிறுகுழுவின் இந்த நடவடிக்கையால் முழு முஸ்லிம் சமூகத்தினதும் சொத்துக்கள், உயிர் என்பவற்றுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளுக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் இடையூறு செய்வதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்த நிலையிலே நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, பொருளாதார செயற்பாடுகளை இடையூறின்றி முன்னெடுக்கவும் பொது மக்களின் அன்றாட பணிகளை தடையின்றி முன்னெடுக்கவும் இடமளிக்கும் நோக்கத்துடனே நாம் பதவி விலகினோம்.

பயங்கரவாதத்தை தோற்கடிக்க நாட்டுப்பற்றுள்ள சக்திகளுடன் இணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றேன். மகாசங்கத்தினரின் வழிகாட்டலை ஏற்று அவர்களின் ஆலோசனைப்படி எதிர்காலத்தில் செயற்படத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# லசந்த, தாஜுடீன் கொலை வழக்குகளை துரிதப்படுத்துமாறு சட்டமா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

லசந்த விக்கிரமதுங்க, ரக்பி வீரர் தாஜுடீன் படுகொலை உள்ளிட்ட நான்கு வழக்குகளின் விசாரணைகளை துரிதப்படுத்துமாறு சட்டமா அதிபர் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். வழக்குகள் தொடர்பான முழுமையான அறிக்கையை தமக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்றும் சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.



நான்கு படுகொலை சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் அதனை சாத்தியமான முறையில் முன்னெடுத்து அதன் முழுமையான அறிக்கையை தமக்கு விரைவாக பெற்றுத் தருமாறும் சட்டமா அதிபர், ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா. பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். அத்துடன் குற்றத் தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன, குற்றத்தடுப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாண் அபேசேகர ஆகியோருக்கு சட்டமா அதிபர் இது தொடர்பில் எழுத்துமூலம் பணிப்புரை வழங்கியுள்ளார்.

மேற்படி நான்கு வழக்குகளும் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ள நிலையில் மக்கள் அது தொடர்பில் பெரும் அவதானத்துடன் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேற்படி வழக்குகள் தொடர்பில் தேவையற்ற தாமதங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அது தொடர்பான விசாரணைகள் தாமதமாவது தொடர்பில் சட்டமா அதிபரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதாகவும் மேற்படி நான்கு வழக்குகள் தொடர்பிலான விசாரணை நடவடிக்கைகளை கண்காணித்து முறைப்படி விசாரணைகளை மேற்கொண்டு அதன் அறிக்கையை சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (7)

# சிங்கப்பூர் நீதியமைச்சரை சந்தித்தார் பிரதமர் ரணில்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், சிங்கப்பூரின் நீதி அமைச்சர் கே.சண்முகனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு சிங்கப்பூருக்கு சென்றுள்ளார்.

இந்தநிலையிலேயே நேற்று முன்தினம் வியாழக்கிழமை அவர் சிங்கப்பூரின் நீதி அமைச்சர் கே.சண்முகனை சந்தித்து பேசியுள்ளார்.

இதன்போது பேசப்பட்ட விடயங்கள் குறித்த தகவல்கள் எவையும் இதுவரையில் வெளியாகவில்லை.

குறித்த சந்திப்பில் சிங்கப்பூரின் வெளிவிவகார அமைச்சர் மற்றும் சிங்கப்பூருக்கான இலங்கையின் நிரந்தரமற்ற உயர்ஸ்தானிகர் ஆகியோர் கலந்து கொண்டனர். (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தர்மமும் கர்வமும்

தருமம் தலை காக்கும்! என்று பெரியவர்கள் சொல்லி வைத்திருக்கின்றார்கள். எதற்காக?எல்லோரும் தலையை காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவா? அப்படி இல்லை.

ஒருவர் செய்கின்ற தர்மம் அவர் தலைமுறையையே காப்பாற்ற வேண்டும் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு பத்துக் காசை ஒருவருக்கு கொடுத்து விட்டு ஊர் முழுவதும் அதை சொல்லிக் காட்டுவதற்கு பேர் தர்மம் இல்லை! விளம்பரம்!

பசிக்கின்றது என்று சொல்லிக் கொண்டு ஒருவர் வருகின்றார். நாம் அவரைக் கூப்பிட்டு உட்காரவைத்து சோறு போடுகின்றோம் என்றால் அவரின் பசி தீர வேண்டும் என்பது தான் நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும்.

அவர் கூடவே நாமும் உட்கார்ந்து சாப்பிட்டு அதைப் போட்டோ பிடித்து விளம்பரப்படுத்த வேண்டும் என்று ஆசைப்பட்டால் அதன் நோக்கம் வேறு என்று அர்த்தம்.

தர்மம் செய்கின்றவர்களுக்கு கர்வம் இருக்கக் கூடாது என்கின்ற கருத்தை புராணங்களே வலியுறுத்தியிருக்கின்றன.

தருமரைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அவர் ஏழை எளியவர்கள் மேலே இரக்கம் கொண்டவர். தாராளமாக தர்மம் செய்கின்றவர்.

அப்போது பாதாளலோகத்தை மகாபலி சக்கரவர்த்தி ஆட்சி செய்து கொண்டிருந்தார்.

மகாபலி, தானதர்மம் செய்வதிலே மிகவும் பெரியவர். அவரிடம் இருந்த விருந்தோம்புகின்ற பண்பை உலகம் முழுவதும் பாராட்டிக் கொண்டிருக்கின்றது. அந்த சமயத்திலே ஸ்ரீகிருஷ்ணரும் தர்மபுத்திரரும் பாதாள லோகத்திலே உள்ள ஒரு தெரு வழியாகப் போய் கொண்டு இருந்தார்கள். தருமர் ஒரு வீட்டிற்குப் போய்,

குடிப்பதற்கு கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்! என்று கேட்டார். அந்த வீட்டுக்கார அம்மா ஒரு தங்கக்கிண்ணத்திலே தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க வாங்கிக் குடித்தார். குடித்து விட்டு வெறும் கிண்ணத்தைத் திருப்பிக் கொடுத்தார். அந்த அம்மா அதை திரும்பி வாங்க மாட்டேன் என்றார்.

ஐயா! எங்கள் நாட்டில் ஒரு தடவை கொடுப்பதை திருப்பி வாங்குகின்ற பழக்கம் இல்லை. அது மட்டுமல்ல! ஒரு தடவை உபயோகப்படுத்தியதை அது தங்கமாக இருந்தாலும் எறிந்து விடுவோம்! என்றார். தருமருக்கு ஆச்சரியமாக போய்விட்டது. அந்த நாட்டு மக்களின் செல்வச் செழிப்பைப் புரிந்து கொண்டார். அதன் பின் தருமரும் ஸ்ரீகிருஷ்ணரும் புறப்பட்டு நேராக மகாபலி ராஜாவோடு அரண்மனைக்குப் போனார். ராஜாவிடம் தருமரை அறிமுகப்படுத்தினார் ஸ்ரீகிருஷ்ணன்.

அரசே இன்றைக்கு தர்மபுத்திரரை தங்கள் ராஜ்யத்திற்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கின்றேன். இவர் தான் தருமங்கள் செய்வதிலே மிகவும் புகழ் பெற்றவர். ஒவ்வொரு நாளும் இவர் 500 பேருக்கு அன்னதானம் செய்கின்றார் என்றார்.

இதைக் கேட்டவுடனே மகாபலி என்ன செய்கின்றார் தெரியுமா?உடனே தன்னுடைய இரண்டு காதையும் கையாலே பொத்திக் கொண்டார்.

நீங்கள் சொல்கின்ற அந்த செய்தி என் காதிலேயே விழ வேண்டாம். என்னிடம் அதை சொல்லாதீர்கள். அப்படிப்பட்ட ஒருவரைப் பற்றி நான் கேட்டுக் கொண்டிருக்க தயாராக இல்லை. இங்கே என் ராஜ்யத்திலே நான் தானம் கொடுப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்கின்றேன். அதை வாங்குவதற்கு ஒருத்தர் கூட கிடைக்கவில்லை. அந்த நிலையிலே யாரும் இல்லை.

ஆனால் நீங்களோ தருமர் தினம் 500 பேருக்கு அன்னதானம் செய்வதாக சொல்லுகின்றீர்கள்! அப்படி என்றால் அவருடைய ராஜ்யத்திலே 500 ஏழைகள் இருக்கின்றதாக அர்த்தம். அதிலே இருந்து அவர் எப்படி ஆட்சி புரிகின்றார் என்பது நன்றாக புரிகின்றது. அப்படிப்பட்ட ஒருவரைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு நான் தயாராக இல்லை! என்று சொல்லி விட்டார் மகாபலி சக்கரவர்த்தி.

அதைக் கேட்டதும் தருமருக்கு வெட்கமாக போயிட்டுது தலை குனிந்தார். அங்கே இருந்த கர்வமும் போய்விட்டது.

இந்தக் கதையை சுவாமி ஒருத்தர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். எதற்காவென்றால் தர்மம் கர்வத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதை எல்லோரும் புரிந்து கொள்வதற்காக.

ஒரு பெரியவருக்கு ஐந்து பிள்ளைகள். ஐந்து பிள்ளைகளுக்கும் பஞ்ச பாண்டவர்கள் பெயர்களையே வைத்தார். அவர்கள் போல் வாழ வேண்டும் என்பதற்காக!

ரொம்ப நாள் கழித்து அந்தப் பெரியவரை கடைத் தெருவிலே பார்த்து ஒருவர் கேட்டார்.

என்ன பெரியவரே! பிள்ளைகள் எல்லாம் இப்ப எப்படி இருக்கின்றார்கள்? என்றார்.

பஞ்ச பாண்டவர்கள் பெயரையே வைத்தேன்.பெயருக்குத் தகுந்த மாதிரியே இருக்கின்றார்கள்! என்றார் பெரியவர்.

அப்படியா? என்றார் அவர். ஆமாம் சொத்து முழுவதும் சூதாட்டத்திலேயே விட்டுவிட்டார்கள் என்றார் பெரியவர்.

# ஆனி மாத இராசி பலன்கள்

## 16.06.2019- 16.07.2019

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

## கூட்டுக்கிரக யோகம் செயற்படும் நேரம்



விகாரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் உங்கள் இராசியிலேயே இருக்கிறார். அவரோடு சூரியன், செவ்வாய், ராகு ஆகிய மூன்று கிரகங்களும் இணைந்து சஞ்சரிக்கின்றன. இந்த கூட்டுக்கிரக யோகத்தின் விளைவாக சில நல்ல மாற்றங்கள் வந்து சேரப் போகிறது. ஒரு கிரகம் நன்மை செய்யா விட்டாலும், மற்றொரு கிரகம் உங்களுக்கு நன்மை செய்யும். எனவே எதையும் நினைத்துக் கவலைப்பட வேண்டாம்.

குறிப்பாக புத - ஆதித்ய யோகம் செயற்படுவதால், எடுக்கும் புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரசியல்வாதிகளாலும், அதிகார பதவியில் உள்ளவர்களாலும் அனுகூலங்கள் ஏற்படும். அவர்கள் உங்கள் குறைகளைத் தீர்க்க முன்வருவர். புதிய தொழில் அமைக்கும் திட்டங்கள் நிறைவேறவும் அவர்கள் வழி அமைத்துக் கொடுப்பர்.

ஜென்மத்தில் ராகுவும், 7இல் கேதுவும் இருப்பதால் சர்ப்ப தோஷம் உங்கள் இராசியை ஆட்கொண்டுள்ளது. எனவே அதற்குரிய சிறப்புப் பரிகாரங்களையும், நாக சாந்தியையும் செய்தால் தடைகளைத் தகர்த்தெறிய எளிய வழிபிறக்கும். தக்க விதத்தில் பொருளாதார நிலையும் உயரும்.

விரய ஸ்தானத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கிறார். எனவே குடும்பச் சுமை கூடும். மனைவி மற்றும் பிள்ளைகள் வழியில் விரயங்கள் அதிகரிக்கும். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்கும் யோகம் கைகூடும். பிள்ளைகளின் எதிர்காலக் கனவு களை நனவாக்க ஏதேனும் சிறு தொகையை செலவிடும் சூழ்நிலை ஏற்படும். மேலும் பெண் பிள்ளைகளின் கல்யாண முயற்சி கைகூட அதிக முயற்சி எடுப்பீர்கள். சீர்வரிசைப் பொருட்கள் மற்றும் தங்கம், வெள்ளி போன்றவை வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். பிள்ளைகள் வெளிநாடு சென்று படிக்க விரும்பினால் அதற்காகவும் ஏற்பாடு செய்ய முன்வருவீர்கள்.

சப்தம ஸ்தானத்தில் இருந்து சனி பார்ப்பதால் இனம்புரியாத கவலை அடிக்கடி உருவாகும். மனமகிழ்ச்சியோடு இருக்கும் நேரத்தில் சில தகவல்களால் தடுமாற்றங்களும் வந்து சேரும். குரு வக்கிர இயக்கத்தில் இருப்பது ஒரு வழிக்கு நன்மைதான்.

குருவின் பார்வை தொழில் ஸ்தானத்திலும், தன ஸ்தானத்திலும் பதிவதால், தொழிலில் தனலாபம் கிடைக்க· தொடர்ந்து குரு வழிபாட்டையும், சனி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். ஆனி உத்தரம் அன்று நடராஜர் அபிஷேகம் பார்ப்பதன் மூலம் நன்மைகளை அதிகமாக சந்திப்பீர்கள்.

கடக செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 24ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். அது செவ்வாய்க்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசியைப் பொறுத்த வரை செவ்வாய் வலிமை இழப்பது யோகம்தான். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும். 'நேர்முகத்தேர்விற்கு சென்றும் பலன் இல்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது நல்ல தகவல் வந்து சேரப் போகிறது. வழக்குகள் சாதகமாக முடியும். உறவினர்கள், பகை அகன்று ஒன்று கூடுவர். இடம், பூமி வாங்குவதில் இருந்த பிரச்சினைகள் அகலும்.

புதன் வக்கிர இயக்கம்

ஜூன் 24 ஆம் திகதி முதல் ஜூலை 14 ஆம் திகதி வரை மிதுனத்தில் புதன் வக்கிரம் பெறுகிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிர இயக்கத்தில் உலா வரும் பொழுது, மிகுந்த நன்மையை வழங்கும். குறிப்பாக தாய்வழி ஆதரவு கிடைக்கும். தனவரவு சேமிப்பாகும். விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் விருப்பம் கொள்வீர்கள். மாமன், மைத்துனர் வழியில் உங்களுக்கு மகத்தான ஒத்துழைப்பு கிடைக்கும். பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர். கலகம் விளைவித்தவர்கள் காணாமல் போவார்கள். பல வழிகளிலும் நன்மைகள் தேடிவரும் நேரம் இது. இதுபோன்ற காலங்களில் புது முயற்சி செய்தால் வெற்றி கிடைக்கும்.




மிதுன சுக்கிரன் சஞ்சாரம்

சுக்கிரன் உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அவர் ஜூன் 29 ஆம் திகதி உங்கள் இராசிக்கே வருகின்றார். புதனுடன் இணைந்து புத- சுக்கிர யோகத்தை உருவாக்கப் போகிறார். எனவே புகழ் கூடும். பொருளாதார நிலை உயரும். பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய தகவல் வந்து சேரலாம். நல்லவர்களின் தொடர்பு நீடிக்கும். நாடு மாற்றங்களும், வீடுமாற்றங்களும் எதிர்பார்த்தபடி அமையும். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். தூர தேசத்திலிருந்து வரும் தகவல் மகிழ்ச்சி தரும். பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பாகப் பிரிவினை சுமுகமாக முடியும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பிள்ளைகளின் எதிர்காலக் கனவுகளை நனவாக்கப் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். இம்மாதம் சிவபெருமான் வழிபாடு செய்வது நன்மையை வழங்கும்.

பெண்களுக்கான பலன்கள்

கூட்டுக்கிரக யோகத்தால், தீட்டிய திட்டங்கள் அனைத்தும் வெற்றியாகும் மாதம் இது. விரயங்கள் கூடுதலாக இருந்தாலும், பணவரவு திருப்திகரமாகவே இருக்கும். வீடு மாற்றங்களும், இடமாற்றங்களும் விரும்பும் விதத்தில் ஏற்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைக்குரியதாக அமையும். கணவன் - மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்பட வேண்டியது அவசியம். தாய்வழி ஆதரவு தக்க விதத்தில் கிடைக்கும். நோய், நொடிகள் நீங்குவதற்கு, மாற்று வைத்தியம் கைகொடுக்கும். உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பு ஓரளவே திருப்தி அளிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர்களின் மூலம் ஏற்பட்ட பிரச்சினை அகலும். உயர் அதிகாரிகளின் மூலம் சில சலுகைகளைப் பெறுவீர்கள். துர்க்கை வழிபாடும், இராகு - கேதுக்களுக்குரிய பிரீதியும் துயரங்கள் விலக வழி வகுத்துக் கொடுக்கும்.

## விரயங்கள் அதிகரிக்கும்



விகாரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, விரயஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் மாதத் தொடக்கத்திலேயே முற்றுகையிட்டு இருக்கின்றன. எனவே குடும்பச் சுமை கூடும். எதிர்பாராத விரயங்கள் ஏராளமாக வரலாம். உறவினர்களுக்காகவும், நண்பர்களுக்காகவும் செலவிடும் சூழ்நிலை அதிகரிக்கும். இருப்பினும் சமாளிக்கும் ஆற்றல் உண்டு. குருவினுடைய பரிபூரண பார்வையும் உங்கள் இராசியில் பதிகிறது. எனவே வழிபாட்டின் மூலம் நீங்கள் வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ள இயலும்.

விரயஸ்தானத்தில் தனாதிபதி சூரியனோடு சகாயஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான புதனும் இணைந்திருக்கிறார். அவரோடு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாயும் சேர்ந்திருக்கிறார். மேலும் பாம்புக்கிரகம் என்று வர்ணிக்கக் கூடிய ராகுவும் அவர்களோடு இணைந்து சஞ்சரிக்கிறார். பஞ்சம ஸ்தானத்தில் குருவும், சந்திரனும் இருக்கிறார்கள். 6ஆம் இடத்தில் விபரீத ராஜயோக அமைப்பில் சனி சஞ்சரிக்கிறார். அவருடன் கேது இணைந்திருக்கிறார். லாப ஸ்தானத்தில் சுக்கிரன் சொந்த வீட்டில் இருக்கிறார்.

இத்தகைய அமைப்பில் கிரக நிலைகள் உலா வருவதால், தொழி லில் வருமானம் வரும் என்றாலும், அது வந்த மறுநிமிடமே செல வாகிவிடலாம். தொடர்ந்து பணம் வந்து கொண்டேயிருக்குமா? என்பது சந்தேகம் தான். ஒரு தொகை செலவழிந்த பிறகே அடுத்த தொகை உங்கள் கரங்களில் புரளும். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்த மாகவும், வெளிநாடு சென்று படிக்கும் ஆர்வத்தைப் பூர்த்தி செய்யும் விதத்தில் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவும் முன்வருவீர்கள். வீடு கட்டுவதற்காக இடம் வாங்குதல், கட்டிய வீட்டைப் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்காக செலவிடும் சூழ்நிலை உண்டு. பெண்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும்.

குரு- சந்திர யோகத்தோடு மாதம் பிறப்பதால், பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் உண்டு. தொழில் வளர்ச்சிக்கு மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

இம்மாதம் குரு வக்கிர இயக்கத்தில் இருப்பதால் சிவாலயத்தில் உள்ள அறுபத்து மூவர் வழிபாட்டையும், குரு தட்சிணாமூர்த்தி வழிபாட்டையும் முறையாக மேற்கொள்வது நல்லது. மேலும் நடராஜர் அபிஷேகம் அன்று சிவபுராணம் பாடி நடராஜரையும், சிவகாமி அம்மனையும் வழிபட்டால் நன்மைகள் தேடி வரும்.

கடகச் செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 24ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். அங்கு நீச்சம் பெறுகிறார். இதன் விளைவாக பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். ரியல் எஸ்டேட் தொழில் புரிவோருக்குப் பத்திரப் பதிவில் கொஞ்சம் தாமதம் ஏற்படலாம். 'விற்ற பூமிக்கும் பணம் வரவில்லை, வைத்திருக்கும் பூமியையும் வாங்க ஆள்வரவில்லை' என்ற நிலை உருவாகும். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ளமாட்டார்கள்.

புதன் வக்கிர இயக்கம்

ஜூன் 24 ஆம் திகதி முதல் ஜூலை 14 ஆம் திகதி வரை மிதுனத்தில் புதன் வக்கிரம் பெற்றிருக்கிறார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், வக்கிர இயக்கத்தில் இருக்கும் பொழுது மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். வருங்கால நலன்கருதி சில புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். பயணங்கள் பலன் தருவதாக அமையும். ஒரு சிலருக்கு அந்நிய தேச முயற்சிகள் கூடக் கைகூடலாம். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.




மிதுன சுக்கிரன் சஞ்சாரம்

ஜூன் 29ஆம் திகதி மிதுனத்திற்கு சுக்கிரன் செல்கிறார். 4, 12க்கு அதிபதி விரய ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது, சில நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வந்து சேரும். அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும். தூர தேசத்திலிருந்து வரும் தகவல் நன்மை தருவதாக அமையும்.

இம்மாதம் வளர்ச்சி கூட வராகி அம்மன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.


பெண்களுக்கான பலன்கள்

இந்த மாதம் வரவைக் காட்டிலும் செலவு கூடுதலாக இருக்கும். வருமானம் திருப்தி தருவதாக இருந்தாலும் மன அமைதி குறைவாகவே இருக்கும். எதிலும் கவனத்துடன் செயற்படுவது நல்லது. கணவன் - மனைவி ஒற்றுமை பலப்படும். அதே நேரத்தில் மூன்றாம் நபர்களின் குறுக்கீடுகளால் சில பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடும். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்ல வேண்டாம். பெற்றோர்களின் ஆதரவு ஓரளவே கிடைக்கும். பிள்ளைகளால் செலவுகள் அதிகரிக்கும். வீட்டைப் பழுது பார்க்கும் வாய்ப்பு உருவாகும். சுப விரயங்கள் அதிகரிக்கும். உடன்பிறப்புகளில் ஒரு சிலர் மட்டுமே உறுதுணையாக இருப்பார்கள். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம் வந்து சேரும். பாகப்பிரிவினைகள் தாமதமாகும். முருகப் பெருமான் வழிபாடு முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

(தொடரும்)

# நாட்டை மீண்டும் இரத்த பூமியாக்க இடமளிக்க முடியாது

## கர்தினால் திட்டவட்டம்



**(கொழும்பு)**

**உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதலின் பின்னர் கிறிஸ்தவ மக்கள் எத்தகைய வன்முறைச் செயல்களிலும் ஈடுபட வில்லை. தொடர்ந்தும் முஸ்லிம் மக்களைப் பாதுகாத்தே வருகின் றனர். இவ்வாறானதொரு நிலையில், நாட்டை மீண்டும் இரத்த பூமி யாக்க இடமளிக்க முடியாது. ஆகவே இத்தகையதொரு நிலையில், நாட்டு மக்களின் மத்தியில் நல்லிணக்கமும் சாந்தி யும் சமாதானமும் உருவாக வேண்டும் என கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.**

ஏப்ரல் 21 தற்கொலைத் தாக் குதலைத் தொடர்ந்து கொழும்பு - கொச்சிக்கடை புனித அந்தோ னியார் திருத்தலம் புனர்நிர் மாணம் செய்யப்பட்டபின்னர் 185 ஆவது வருடாந்த திருநாள் திருப்பலி கொழும்பு பேராயர் கர் தினால் மல்கம் ரஞ்சித் ஆண்ட கையின் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணி யளவில் இடம்பெற்றது.

புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக் கப்பட்ட நிலையிலேயே வருடா ந்த திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இதன்போதுதமது உறவுகளை இழந்த, காயங்களுக்குள்ளான நூற்றுக்கணக்கானவர்கள் மற் றும் குருக்கள், அருட்சகோதரி கள், அரசியல் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதவர்கள், கடற்ப டைத் தளபதி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்ததுடன், பக்தர் கள் உயிரிழந்த மற்றும் படுகா யமடைந்து சிகிச்சை பெற்றுவ ரும் தமது உறவுகளுக்காக கண் ணீர்மல்க பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

மன்னார் மறைமாவட்ட பேரா யர் இம்மானுவேல் உள்ளிட்ட ஆயர்களால் ஒப்புக்கொடுக்கப்ப ட்ட கூட்டுத்திருப்பலியின் போது உரையாற்றுகையிலேயே மல் கம் ரஞ்சித் ஆண்டகை மேற்க ண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# உயர்மட்டக் கலந்துரையாடலின் பின்பே ஆடை சுற்று நிருபத்தை வெளியிட்டேன்

## பொது நிர்வாக அமைச்சின் செயலர் ரத்னசிறி


(கொழும்பு)

அரச ஊழியர்கள் அணிய வேண்டிய ஆடை தொடர்பில் வெளியிடப்பட்டிருந்த சுற்றுநிரு பம் துறைசார் அமைச்சர் மற்றும் பொதுநிர்வாக அமைச்சின் உயர் மட்டக் குழுவின் தீர்மானத்திற்கு அமையவே வெளியிடப்பட்டது.

ஆடைதொடர்பில் அரச சேவை யாளர்களுக்கு பொதுவான ஒழுக் கக்கோவையை அறிமுகப்படு த்துவது தொடர்பில் நீண்டகால மாக கலந்துரையாடப்பட்டதுடன், பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து அரச அலுவலகங்கள் விடுத்த கோரிக்கைகளையடு த்தே புதிய சுற்று நிருபம் வெளி யிடப்பட்டது. இதனால் முஸ்லிம் பெண்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக எவ்வித முறைப் பாடுகளும் எமக்குக் கிடைக்கவி ல்லை என பொது நிர்வாக அமை ச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்ன சிறி தெரிவித்தார்.

அத்துடன், இச்சுற்றுநிருபத் திலுள்ள குறைபாடுகள் தொடர் பில் விரிவான கலந்துரையாடல் நடத்தி புதிய சுற்றுநிருபத்தை வெளியிட நாங்கள் தயாராகவே உள்ளோம். துறைசார் அமைச் சர் வெளிநாடு சென்றிருந்தமை யால் கலந்துரையாடல்களை நடத்த முடியாது போனதாகவும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் முகமாக நியமிக்கப்பட்ட விசேட பாராளுமன்றத் தெரிவுக்குழு வின் அமர்வு நேற்று முன்தினம் 5 ஆவது தடவையாக நடைபெற் றது. இத் தெரிவுக்குழு முன்னி லையில் சாட்சியமளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.



அரச சேவையாளர்களுக்கு ஆடைதொடர்பில் பொதுவான ஒழுக்க கோவையொன்றை அறி முகப்படுத்தும் நோக்கில் நீண்ட காலமாக கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவந்தன. ஏப்ரல் 21 ஆம் திகதி தாக்குதலுக்குப் பின் னர் நாட்டில் ஏற்பட்ட அச்சுறுத்த லான சூழ்நிலையின் பின்னர் பல்வேறு தரப்பினரும் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே ஆடை தொடர்பிலான புதிய சுற்று நிரு பம் வெளியிடப்பட்டது.

இச்சுற்றுநிருபத்தை வெளி யிடுவதற்கு முன்னர் துறைசார் அமைச்சர் மற்றும் பொது நிர் வாக அமைச்சின் குழுவினருடன் கலந்துரையாடியே சுற்றுநிரு பத்தை வெளியிட்டோம். இது தொடர்பில் அமைச்சர் முதல் அனைவரும் அறிவர். இது எனது தனிப்பட்ட தீர்மானமும் அல்ல.

இராணுவத்தினர், பொலி ஸார் மற்றும் வைத்தியர்களுக் கும் பொதுவான உடைகள் உள் ளன. அதன் அடிப்படையில் அரச சேவையாளர்களுக்கும் பொது வான உடையொன்றை அறிமுக ப்படுத்தும் நோக்கில் பல கலந்து ரையாடல்கள் இடம்பெற்று வந் தன. பயங்கரவாதத் தாக்குதல் களின் பின்னர் முகத்தை முழு மையாக மறைக்கும் ஆடைக ளுக்கு அவசரகாலச் சட்டத்தின் பிரகாரம் தடைவிதிக்கப்பட்டன. கடந்தகாலத்தில் இடம்பெற்று வந்த பேச்சுக்கள் மற்றும் அவசர காலச் சட்டத்தில் ஜனாதிபதி எடுத்திருந்த தீர்மானத்தின் அடிப் படையிலேயே நாம் இச்சுற்று நிருபத்தை வெளியிட்டிருந் தோம்.

இந்தச் சுற்றுநிருபத்தால் முஸ்லிம் பெண்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக எவ்வித முறைப்பாடுகளும் எமக்கு இது வரை கிடைக்கவில்லை. முஸ் லிம் பெண்கள் சிலர் பணிக்குச் செல்லவில்லை என்றும் எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. மனிதவுரிமைகள் ஆணைக் குழு மற்றும் பிரதமரின் அலுவ லகத்திலிருந்து இரண்டு கடிதங் கள் கிடைத்திருந்தன.

சுற்றுநிருபத்தைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை யென பிரதமர் அலுவலகத்தி லிருந்து கிடைத்த கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும் துறைசார் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண் டார வெளிநாடு சென்றிருந்ததால் இப்பிரச்சினை தொடர்பில் எம் மால் கலந்துரையாட முடியாது போனது.

இந்த விடயத்தில் மாற்றங் களை செய்ய நாங்கள் தயா ராகவே உள்ளோம். அமைச்சர வையின் முடிவு எதுவாக இருந் தாலும் அதற்கு நாம் செவிமடுத்து செயற்படத் தயாராகவுள்ளதாக வும் அவர் தெரிவித்தார். (இ-7)

# உலக கடல் தினத்தையொட்டி விழிப்புணர்வு நடைபவனி






(யாழ்ப்பாணம்)

உலக கடல் தினத்தையொட்டி வல்வெட்டித்துறை நகரசபை யினரும் அபிவிருத்திக்கான இலங்கை உதவு ஊக்கு மைய த்தினரும் இணைந்து விழிப்பு ணர்வு நடைபவனி ஒன்றை நேற்று மேற்கொண்டனர்.

பிளாஸ்டிக், பொலித்தீன் கழி வுகள் கடலில் சேருவதால் ஏற்ப டும் பாதிப்பை மக்களிடையே தெளிவூட்டுவதற்கும் பிளாஸ்டிக், பொலித்தீன் பாவனை தொடர் பான விழிப்புணர்வை ஏற்படுத் துவதற்கும் மேற்கொள்ளப்பட்ட நடைபவனி வல்வை மகளிர் கல்லூரியிலிருந்து வல்வெட்டித் துறை நகரசபை வரை நடை பெற்றது.

இந் நடைபவனியில் பொது மக்களுக்கும் வியாபார நிலை யங்களுக்கும் துண்டுப்பிரசுரங் கள் வழங்கப்பட்டன.

இதில் வல்வெட்டித்துறை நகரசபைத் தவிசாளர், செயலா ளர், உறுப்பினர்கள், ஊழியர் கள், அபிவிருத்திக்கான இல ங்கை உதவி ஊக்கு மையத்தின் பணியாளர்கள், சூழல் நேய அமைப்புக்கள், கிராமசேவையா ளர்கள், சமுர்த்தி உத்தியோ கத்தர்கள், பொருளாதார அபி விருத்தி உத்தியோகத்தர்கள், சூழல் நேயமுள்ளவர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்ட னர். (5-114)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

274



எஸ். நடேசன்

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

செல்வநாயகம் 1949 இல் தமிழரசுக் கட்சியைத் ஸ்தாபித்த போது கட்சியின் கொள்கைகளை முன்னெடுப்பதற்காக சுதந்திரன் எனும் தமிழ் வாரப் பத்திரிகையையும் ஆரம்பித்தார். அப்பத்திரிகை இந்தியத் தமிழரின் உரிமைகள் குறித்த செய்திகளுக்கு முன்னுரிமை கொடுத்து தொடர்ச்சியாகப் பிரசுரித்து வந்தது.

இந்தியத் தமிழர் இலங்கைத் தமிழருடன் All Island Tamil Front என்ற அடிப்படையில் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்தார்.

1977களில் புதிய அரசியல் யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டு இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமை பிரச்சினை இலங்கை அரசியலில் குறிப்பாக தமிழர் அரசியலில் மிகவும் தீவிரமடைந்த பிரச்சினையாக உருவெடுத்தது.

1952-1956 காலப்பகுதிகளில் தமிழரசுக் கட்சியும் செல்வநாயகமும் நிகழ்த்திய போராட்டங்கள் ஒட்டுமொத்தத்தில் தமிழரின் தேசியவாத எழுச்சிக்குப் பாரிய பங்களிப்பை வழங்கிய முக்கிய அம்சமாக இருந்தமையைக் காணமுடிகிறது.

மேற்படி காலகட்டத்தில் தமிழரசுக் கட்சி முன்வைத்த சமஷ்டி ஆட்சி முறைக் கோரிக்கை தமிழரின் அதிமுக்கிய அரசியல் பிரச்சினையாகவும் இலங்கை அரசாங்கத்தின் பிரச்சினையாகவும் இடம்பெறத் தொடங்கியது.

செல்வநாயகமும் அவரது அரசியல் சகாக்களும் பொன்னம்பலம் இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமை பறிபோக ஆதரவு வழங்கியதன் காரணமாகவும் தமிழரின் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் தமிழரசுக்கட்சியின் கீழ் மாற்று அரசியல் திட்டங்களை மேற்கொண்டதன் விளைவாகவுமே சமஷ்டிக் கொள்கை அவர்களால் முன்வைக்கப்பட்டது.

செல்வநாயகத்தாலும் தமிழரசுக் கட்சியாலும் 1950களில் முன்வைக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கான சுயாட்சி அரசு என்ற மாற்றுத் திட்டம் தமிழ்மொழி, தமிழரின் பாரம்பரிய பிரதேசம் எனும் இரண்டையும் இவை ஒரு தேசத்தின் அதி முக்கியமான அம்சங்கள் என்ற வகையில் ஒன்றிணைத்தது.

இலங்கைத் தமிழர் இப்பிரதேசத்திலேயே வாழ்ந்தமையால் அவர்கள் தமது வாழ்வாதார உரிமைக்காக சிங்கள பெரும்பான்மை அரசுகளுடன் போராடுவது நியாயமானதாக இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் தமிழரசுக்கட்சி த் தலைவர்கள் திருகோணமலையில் 1952 இல் கூட்டிய மகாநாட்டில் ஏழு முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றினர்.

சமஷ்டி அரசு முறை வழியில் எவராலும் பறிக்கப்படமுடியாத ஒரு தேசத்தை உடைமையாக்கிக் கொள்வது அவற்றில் பிரதான இடத்தை வகித்தது. அத்துடன் தமிழரசின் தலைநகரமாகத் திருகோணமலையே அமையும் எனவும் பிரகடனப்படுத்தப்பட்டது.

இது கிழக்கு மாகாணத் தமிழருக்கும் வடமாகாணத் தமிழருக்குமிடையே அரசியல் ரீதியான மிகவும் இறுக்கமான இணைப்பை ஏற்படுத்த உதவியது. 1951 தொடங்கி 1972களில் தமிழரசுக் கட்சி ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து தமிழ்க் கோரிக்கையை முன்னெடுக்கும் வரை சமஷ்டிக் கோரிக்கைக்காகத் தொடர்ந்து ஜனநாயக வழிமுறைகளில் பல்வேறு போராட்டங்களை சாத்வீக முறையில் நடத்தினர்.

1952 ஆம் ஆண்டுத் தேர்தல் பிரசாரத்தின் போது தமிழரசுக் கட்சிக்கு எதிரணியிலிருந்த ஜி.ஜி. பொன்னம்பலம் தமிழரசுக் கட்சியினர் தமது கட்சிக்கு ஆங்கிலத்தில் சமஷ்டிக் கட்சி என்றும் தமிழில் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்றும் இரு வேறுபட்ட பெயர்களைச் சூட்டி இரட்டை வேடமிடுகின்றனர் என நிறுவ முயன்றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி என்னும் பெயரில் உள்ள அரசு என்ற சொல் தமிழில் தனியரசு என அர்த்தப்படுமே அல்லாது அதன் ஆங்கிலப்பெயர் குறிப்பது போன்று சுயாட்சிப் பிரதேசம் அல்ல என எடுத்துரைத்தார். சாவகச்சேரியில் நடந்த ஒரு தேர்தல் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியினர் பூரண இறைமையை உடைய அரசைக் குறிக்கின்ற தமிழ் அரசு என்ற பதத்தைக்கொண்ட பெயரைத் தமிழ்மக்களை ஏமாற்றுவதற்காகப் பயன்படுத்துகின்றனர் எனக் குற்றம்சாட்டினார்.

பேராசிரியர் வில்சன் இந்த விடயத்தையிட்டு பின்வருமாறு எழுதினார். (தமிழரசுக் கட்சியின்) மத்திய குழு தமிழ்மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி விடும் அதேசமயம் தனது கட்சியின் ஆங்கிலப் பெயரை வைத்துக்கொண்டு சிங்களத் தலைமையுடன் பிரச்சினையைத் தீர்க்கப் பார்க்கின்றது எனக் குற்றம் சுமத்திய பொன்னம்பலம் சமஷ்டிமுறை உருவாக்கிய இக்கட்டான நிலையைத் தெளிவாக்கினார்.

சிங்கள ஆதிக்கத்திற்கு எதிராகத் தூண்டப்பட்ட தமிழ்த் தேசியம் அது கோரும் சமஷ்டி முறையிலமைந்த சுய ஆட்சிக் கோரிக்கை தோல்வியடையும் பட்சத்தில் அதற்குப் பதிலாக சுதந்திர தனிநாட்டுக் கோரிக்கையை முன்னெடுக்கும் சாத்தியத்தையும் தன்னுள்ளே கொண்டதாகத் தான் இருந்தது.

பொன்னம்பலம் தமிழரைத் தமிழரசுக் கட்சி ஏமாற்றுவதாகச் சுமத்திய குற்றச் சாட்டுக்குப் பதில் சொல்லும் வகையில் செல்வநாயகம் தமிழரசு என்பது அது பூரண இறைமையைக் கொண்டதாகவோ அல்லது சுய ஆட்சியாகவோ எப்படித்தான் இருந்தாலும் அது தமிழ்த் தேசத்தையே குறிக்கும் எனப் பதிலளித்ததுடன் தமிழரசுக் கட்சி என்பது கட்சியின் பெயரல்ல அது கட்சியை விளக்கும் ஒரு பதம் எனவும் கூறினார்.

இந்த வாதத்தைப் புறந்தள்ளிய பொன்னம்பலம் ஏற்கனவே உள்ள உள்ளூராட்சி மன்றங்களைவிட ஓரளவு அதிகாரம் கூடிய மாகாண சபையை மட்டுமே பெறுகின்ற தமது இலக்கை மறைத்துக்கொண்டு தமிழரசுக் கட்சி தமிழரைத் தன்னிடத்தில் கவர்ந்து கொள்வதற்காகவே தனது பிரசாரத்தை தமிழ் அரசுக்கான பிரசாரம் என வேடம் புனைந்துள்ளது என மேலும் குற்றம் சுமத்தினார். (தொடரும்)

# மாவனெல்லையில் புத்தர் சிலைகள் தகர்ப்பு
# சஹ்ரானின் உத்தரவின் பேரில் இடம்பெற்றது

## நீதிமன்றுக்கு சி.ஐ.டி.அறிவிப்பு



மாவனெல்லை நகரை அண்மித்த பகுதிகளில் ஒரே இரவில் நான்கு இடங்களில் புத்தர் சிலைகள் அடித்து சேதமாக்கப்பட்ட சம்பவங்களானது, உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் பிரதான சூத்திர தாரியாக கருதப்படும் பயங்கரவாதி சஹ்ரான் ஹாஷிமின் உத்தரவுக்கு அமையவே முன்னெடுக்கப்பட்டதாக சி.ஐ.டி நேற்று முன்தினம்மாவனெல்லைநீதவான் நீதிமன்றுக்கு அறிவித்தது.

இந்த விவகாரம் தொடர்பிலான வழக்கு நேற்று முன்தினம் முற்பகல் மாவனெல்லை நீதவான் உப்புல் ராஜகருணா முன்னிலையில் விசாரணைக்கு வந்த போதே, குறித்த விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் பிரதான விசாரணை அதிகாரியான சி.ஐ.டியின் விசேட விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் மாரசிங்க இதனை நீதவானுக்கு அறிவித்தார்.

இதன்போது இந்தச் சிலை உடைப்பு விவகாரத்தை பூரணமாக நெறிப்படுத்தியுள்ள சஹ்ரான், அதனை முன்னெடுத்த சந்தேக நபர்களுக்கு "நீங்கள் போய் சிலைகளை உடைத்து விட்டு என்னிடம் வாருங்கள்" எனக் கூறியுள்ளதாகவும் சி.ஐ.டி. யின் விசாரணை அதிகாரி நீதமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இந்தச் சிலை உடைப்பு விவகாரம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் மாவனெல்லை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்த போது, நீதிமன்றின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே விளக்கமறியலிலுள்ள 14 சந்தேக நபர்கள் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டனர். இதனைவிட சி.ஐ.டியின் பிடியில் இந்த விவகாரம் தொடர்பில் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட 20 சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் விசேட பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டு நீதவானின் மேற்பார்வைக்காக ஆஜர் செய்யப்பட்டனர். இந்த விவகாரத்தில் இதுவரை கைதான சந்தேக நபர்கள் 34 பேர் ஆவர்.

இதன்போது நீதிமன்றின் பாதுகாப்புக்காக மேலதிகமாக இராணுவம் வரவழைக்கப்பட்டிருந்தமையும் விசேட அம்சமாகும். சந்தேக நபர்களை முன்னிலைப்படுத்திய பின்னர் விசாரணை அதிகாரி பொலிஸ் பரிசோதகர் மாரசிங்க மேலதிக விசாரணை அறிக்கையை முன்வைத்து விடயங்களைத் தெளிவுபடுத்தினார்.

அதன்படி, புத்தர் சிலைகளைத் தகர்க்கும் இந்தச் செயற்பாடுகள் பயங்கரவாதி சஹ்ரானின் பூரண மேற்பார்வை மற்றும் உத்தரவின் கீழ் இடம்பெற்றதாக சி.ஐ.டி.அதிகாரி நீதிமன்றுக்கு சுட்டிக்காட்டினார். அத்துடன் இந்த விவகாரத்தில் கைதாகி விளக்கமறியலிலுள்ள இப்ராஹீம் மௌலவி என்பவரது வீட்டில் இந்தச் சிலை உடைப்புக்கான வகுப்புக்கள் சஹ்ரானால் எடுக்கப்பட்டுள்ளதாகவும் வகுப்பின் முடிவில் சிலைகளை உடைத்து விட்டு நீங்கள் மீண்டும் என்னிடம் வாருங்கள் என சஹ்ரான் அங்கிருந்த தனது சகாக்களுக்கு கூறியுள்ளதாகவும் சி.ஐ.டி. விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டதாக அந்த அதிகாரி நீதிமன்றுக்கு சுட்டிக்காட்டினார்.

இதனைவிட சிலை உடைப்பு விவகாரத்தில் சந்தேக நபர்கள் சிலர் சில நாட்களில் கைதான நிலையில் அந்த சந்தேக நபர்களைப் பிணையில் விடுவித்துக் கொள்ள சட்டத்தரணிகளுக்கு வழங்குமாறு கூறி சஹ்ரான் 20 இலட்சம் ரூபாய் பணத்தை இப்ராஹீம் மௌலவி எனும் சந்தேக நபருக்கு கொடுத்தமை தொடர்பிலும் விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அது குறித்து மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகவும் அந்த அதிகாரி நீதிமன்றில் சுட்டிக்காட்டினார்.

விளக்கமறியலிலுள்ள சந்தேக நபர்கள் 14 பேரையும் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை மீள விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான் உப்புல் ராஜகருணா, தடுப்புக் காவலிலுள்ள சந்தேக நபர்கள் 20 பேரையும் மீள நான்காம் மாடியில் தடுத்து வைத்து விசாரிக்கவும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி அவர்களை மேற்பார்வைக்காக மீள நீதிமன்றில் ஆஜர் செய்யவும் சி.ஐ.டி.க்கு உத்தரவிட்டார்.

அத்துடன் இந்த விவகார விசாரணைகளின் போது கைப்பற்றப்பட்ட வெடிபொருட்களை அழிக்க, கேகாலை அதிரடிப்படை கட்டளைத் தளபதிக்கும் இதன் போது நீதிமன்றம் உத்தரவொன்றை பிறப்பித்தது.

கடந்த 2018 டிசெம்பர் 25 ஆம் திகதி. அதிகாலை நேரத்தில் குருநாகல் மாவட்டம் பொதுஹர பொலிஸ் பிரிவின் கட்டுபிட்டிய கோணவல பகுதியில் ஆலயம் ஒன்றில் இந்துக் கடவுள்களைக் குறிக்கும் உருவச்சிலைகள் அடையாளம் தெரியாதோரால் அடித்து நொறுக்கி சேதமாக்கப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் பொதுஹர பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்த நிலையில், அடுத்த 24 மணி நேரத்தில் அதாவது கடந்த 2018 டிசெம்பர் 26 ஆம் திகதி இதனையொத்த ஒரு சம்பவம் யட்டிநுவர - வெலம்பட பொலிஸ் பிரிவில் பதிவானது.

அதிகாலை 3மணியளவில் வெலம்பட பொலிஸ் பிரிவின் லெயம்கஹவல பகுதியில் மூன்றரை அடி உயரமான புத்தர் சிலை இனம் தெரியாதோரின் தாக்குதலுக்குள்ளானது. அத்துடன் அந்த மூன்றரை அடி உயரமான புத்தர் சிலை சேதப்படுத்தப்படும் அதே நேரம் அதனை அண்டிய பகுதியில் இருந்த மேலும் மூன்று சிறு சிலைகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

அதே தினம் அதிகாலை 4 மணியளவில் மாவனெல்லை - திதுருவத்த சந்தியிலுள்ள புத்தர் சிலையும் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது. இதன்போது தான் இந்த சிலை உடைப்பு விவகாரத்தில் அல்லது இந்த அருவருக்கத்தக்க சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க தடயமும் கிடைத்திருந்தது. இக்காலப்பகுதியில் மாவனெல்லை பகுதிகளில் நான்கு இடங்களில் சிலைகள் சேதப்படுத்தப்பட்டிருந்தன. அவை இரு பீ அறிக்கைகள் ஊடாக நீதிமன்றுக்கு அறிக்கையிடப்பட்டன.

மாவனெல்லை - திதுருவத்த சந்தியில் புத்தர் சிலையைத் தாக்க மோட்டார் சைக்கிளில் இரு வர் வந்தனர். இவ்வாறு வந்ததாக கூறப்படும் இருவரில் ஒருவரை பிரதேச வாசிகள் துரத்திப் பிடித்து மாவனெல்லை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அது முதல்இது குறித்த விசாரணைகள் இடம் பெற்று வரும் நிலையிலேயே தற்போது இவ்விடயத்தில் பல அதிர்ச்சியளிக்கும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1749

### தர்சி

ஒருவரை நம்புவதற்கு முன்னாலும் சரி
ஒருவரை விட்டுவிலகுதற்கு முன்னாலும் சரி
பல தடவை சிந்தியுங்கள்



### சிந்து

அழுவதற்கான காரணத்தை சொல்லத்
தெரியாத வயதில் மிகவும் சத்தமாகவும்
சொல்லத் தெரிந்த வயதில் மௌனமாக
மனதிற்குள்ளும் அழுது கொள்கிறோம்



### தமிழ்

உழைப்பின் சக்தியே உலகில் மிக
உன்னதமானது... அதை வெற்றிகொள்ளும்
ஆற்றல் வேறெந்த சக்திக்கும் கிடையாது



### கிரி

வாழ்வதற்கான செலவு மிகக் குறைவு.
அடுத்தவரைப் போல வாழ்வதற்கான
செலவுதான் அதிகம்



### டினா

கல்யாணத்துக்கு முன்னாடி பேய் படம்
பார்க்கிறதுன்னா எனக்கு ரொம்பப் பயம்
கல்யாணத்துக்கு அப்புறம் இப்ப தினமும்
டீல் பண்றதால பழகிடுச்சு



### சஜி

எத்தனை பேர் உள்ளனர்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையில் இப்போது முத்துறைகளில் முரண்பாடு

## கெஹலிய சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டின் முத்துறைகளிலும் முரணபாடுகள் தோற்றுவிக்கப் பட்டுள்ளதாக மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முறையற்ற செயற்பாட்டினூடாக சபாநாயகர் கரு ஜெயசூரிய முத்துறைகளிலும் முரண்பாடுகளைத் தோற்றுவித்தார்.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அமைத்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாகவே பல பிரச்சினைகள் தற்போது ஏற்பட்டுள்ளன.

தெரிவுக் குழுவில் சாட்சியங்கள் அனைத்தும் ஜனாதிபதிக்கு எதிராக அமைந்துள்ளமையால் அவர் அமைச்சரவையை கூட்டாமல் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்த முனைகின்றார். இப்பிரச்சினைகள் அனைத்திற்கும் சபாநாயகரே பொறுப்புக் கூற வேண்டும்.

அத்துடன் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் ஜனாதிபதியும் பிரதமரும் வெளிநாடுகளுக்குச் சென்றமை பொருத்தமற்றது' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# "அயோக்கியர்களின் அடைக்கலம் தேசப்பற்று கோஷமாகும்"


## அரசியல் நிலவரம் குறித்து ஹக்கீம் அதிருப்தி

(கொழும்பு)

அயோக்கியர்களின் கடைசி அடைக்கலம் தேசப்பற்று என்ற கோஷமாகும் என ஓர் ஆன்மீக எழுத்தாளரான மார்க் பைன் என்பவர் கூறியுள்ளதாகவும், அதுதான் இலங்கையிலும் தற்பொழுது நடைபெறுகின்றது எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவும் நேரடி கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது நாட்டின் முன்னைய வரலாற்றில் தேசப்பற்று, தேசிய இயக்கம் என்ற விடயங்கள் நாட்டின் நன்மைக்கே பயன்படுத்தப்பட்டன. இப்பொழுது தீமைக்கே அது பயன்படுத்தப்படுகின்றது.



சிறுபான்மை சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஏதேனும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அல்லது அதிகாரம் படைத்தவர் ஓர் ஆதங்கத்தினாலோ, உணர்ச்சி வசப்பட்டோ ஒரு கருத்தைக் கூறும் போது அது இனவாதமாக பார்க்கப்படுகின்றது. இதே விதமாக பெரும்பான்மைச் சமூகத்தின் மத்தியில் சிறுபான்மையினருக்கு எதிராக இனவாதத்தைத் தூண்டும் விதமாக பேச்சுக்கள் இடம்பெற்றாலும் அதனைக் கண்டுகொள்ளாமல் இருக்கின்றார்கள். இது ஏன் என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். (7)

# இஸ்லாமிய பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு சர்வதேச நாடுகள் இணைந்து நடவடிக்கை

## ஒஸ்ரின் தகவல்



(கொழும்பு)

இஸ்லாமிய அரச பயங்கரவாதத்தை இல்லாது செய்வதற்கான நடவடிக்கைகளை, இலங்கை அரசாங்கம் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுடன் ஒத்துழைத்து முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்தியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் ஒஸ்டின் பெர்னாண்டோ, இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் குறித்த விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தாக்குதல்களுடன், ஐ.எஸ். தீவிரவாதிகளுடனும் தொடர்புகளைப் பேணிய பலர் தற்போது கைது செய்யப்பட்டு தடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இஸ்லாமிய பயங்கரவாத மனநிலையுடன் செயற்படுகின்றவர்களை அடையாளம் கண்டு கைது செய்வதற்கான நடவடிக்கைகளை சர்வதேச நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசாங்கம் மேற்கொள்கிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (7)

# செய்தித்துளிகள்

## படைப்புழுவால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நிவாரணம்



(கொழும்பு)

சேனா படைப்புழுவின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு அதற்குத் தேவையான நிதியையும் அமைச்சு ஒதுக்கீடு செய்ததாக விவசாயம், கிராமிய பொருளாதாரம், பண்ணை வள அபிவிருத்தி நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும்நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்தார்.

சேனா படைப்புழுவின் தாக்கத்தின் காரணமாக கடந்த ஒரு சில மாதங்களாக பெரும் சவாலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்தப் படைப்புழு இனத்தை முழுமையாக அழித்துவிட்டோம் என்று குறிப்பிட முடியாது. ஆனால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இனந்தெரியாத நபர்களால் ஆட்டோவுக்கு தீ வைப்பு

(தெனியாய)

மாத்தறை, தெனியாய பெவர்லி மேல் பிரிவின் வீடொன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஆட்டோ ஒன்றுக்கு அதிகாலை 2 மணியளவில் இனந்தெரியா தோரால் தீ வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அதன் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட் டார் சைக்கிள் ஒன்றும் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த 2 வாகனங்களும் அதே இடத்தில் [illegible] உறவினர்களின் வீடுகளில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தன. இது குறித்து தெனியாய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (7)

## மாவனெல்லை புத்தர்சிலை விவகாரம் 14 பேருக்குத் தொடர்ந்தும் மறியல்

மாவனெல்லை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 14 பேரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கும்படி மாவனெல்லை நீதவான் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் குறித்த நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே, இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.


இதன்படி செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 80 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 240 | 330 | 500 |
| தக்காளி | 100 | 80 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 100 | 120 |
| கோவா | 120 | 100 | 60 | 100 |
| கரட் | 150 | 160 | 150 | 200 |
| பூசணி | 100 | 70 | 50 | 80 |
| புடோல் | 80 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 160 | 140 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 90 | 120 |
| பாகற்காய் | 200 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 50 | 80 |
| பயற்றங்காய் | 160 | 150 | 100 | 160 |
| லீக்ஸ் | 140 | 90 | 80 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 60 | 100 |
| கறிமிளகாய் | 200 | 180 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 150 | 200 |
| போஞ்சி | 200 | 200 | 250 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 60 | 120 |
| கீரை -1பிடி | 40 | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 300 | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 200 | 110 | 160 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 120 | 120 | 120 |

# சிறுவர் அரங்கம்

## ஆனந்தர் ஞானம் பெற்ற கதை



இளவரசர் சித்தார்த்தர் ஞானம் பெற்று கௌதம புத்தர் ஆனதும் அவருடன் வந்து சேர்ந்தார் புத்தரின் நெருங்கிய உறவினர் ஆனந்தர். இவர் புத்தர் மீது கொண்ட அன்பால் அவருடைய சீடனாகி விட்டார். அதுமட்டுமல்ல மற்ற சீடர்களை விட புத்தரிடம் தனக்கு அதிக உரிமை உண்டு என நினைத்தார். அதன்படியே நடந்து கொண்டார்.

ஒரு நாள், "சித்தார்த்தா! நான் உனக்கு அண்ணன் முறை. நான் என்ன சொன்னாலும் நீர் கேட்க வேண்டும். எனக்காக நான் சொல்லும் மூன்று கட்டளைகளை ஏற்க வேண்டும்," என்றார்.

"அந்த மூன்று கட்டளைகள் என்ன?" என்று கேட்டார் புத்தர்.

"நான் எப்பொழுதும் உம்முடனேயே இருக்க வேண்டும். எந்தச் சூழலிலும் என்னை வேறு நாடுகளுக்கு அனுப்பக்கூடாது. [illegible] உம்மைச் சந்திக்க யாருக்கு அனுமதி தந்தாலும் நீர் சந்திக்க வேண்டும். நள்ளிரவாக இருந்தாலும் முடியாது என்று சொல்லக்கூடாது. மூன்றாவதாக நீர் உறங்கும் போது உமது அருகிலேயே நான் உறங்க வேண்டும். வேறு அறைக்குச் சென்று தூங்கு என்று என்னிடம் சொல்லக் கூடாது. சரியா," என்றார்.

"அப்படியே செய்கிறேன்!" என்று வாக்குறுதி தந்தார் புத்தர். நாற்பத்திரண்டு ஆண்டுகள் புத்தருடனே தங்கியிருந்தும் ஆனந்தர் ஞானம் பெறவில்லை. வெகு தொலைவிலிருந்து வந்து புத்தரின் சீடர்களான சிலர் சில நாட்களிலேயே ஞானம் பெற்றதை அறிந்த ஆனந்தர் தனக்கு மட்டும் ஏன் ஞானம் கிடைக்கவில்லை என்று வருந்தினார்.

இறக்கும் நிலையில் இருந்தார் புத்தர். அவரிடம் ஆனந்தர், "இரவும் பகலும் உம்மைப் பிரியாமல் நாற்பத்திரண்டு ஆண்டுகள் கழித்து விட்டேன். இன்னும் நான் ஞானம் பெறவில்லை. நீர் இறந்தபின் என் நிலை என்ன ஆகும்?" என்று கண்களில் கண்ணீர் வழியக் கேட்டார். "வாழ்க்கையைப் பற்றி நீர் ஒன்றும் புரிந்துகொள்ளவில்லை. நீர் ஞானம் பெறுவதற்கு நானே தடையாக இருந்திருக்கிறேன். நான் இறந்தபிறகு நீர் ஞானம் பெற்றாலும் பெறலாம்.

"நீர் என்னிடம் மூன்று வேண்டுகோளை வைத்தீர். நான் அவற்றை ஏற்றுக் கொண்டது உம் வாழ்க்கைக்குத் தடையாயிற்று. நீர் எப்பொழுதும் என் அண்ணன் என்றே நினைத்துக் கொண்டு மற்றவர்களை விட என்னிடம் உமக்கு அதிக உரிமை உள்ளது என்று கருதினீர். உமக்காகத் தான் அந்த மூன்று வேண்டுகோளை ஏற்றுக் கொண்டேன். என் இறப்பு ஒன்று தான் நீர் ஞானம் பெற உமக்கு உதவி செய்யும்" என்றார். அதன்பிறகு இறந்தும் போனார் புத்தர்.

ஞானம் பெற்ற சீடர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடினர். கடந்த நாற்பத்திரண்டு ஆண்டுகளில் புத்தர் என்னென்ன அறிவுரைகள் சொன்னாரோ அவற்றை எழுதி வைக்க வேண்டுமென்று நினைத்தனர். அங்கிருந்த யாருமே புத்தருடன் நாற்பத்திரண்டு ஆண்டுகள் தொடர்ந்து இருந்தது இல்லை. அத்தனை ஆண்டுகளும் புத்தருடன் இருந்த ஆனந்தரோ இன்னும் ஞானம் பெறவில்லை. அதனால் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள அவர் அனுமதிக்கப்படவில்லை.

கூட்டம் நடக்கும் இடத்திற்கு வெளியே அமர்ந்து புலம்பியபடி இருந்தார் ஆனந்தர். "புத்தரே! உங்களுடன் நாற்பத்திரண்டு ஆண்டுகள் இடைவிடாமல் இருந்திருக்கிறேன். உங்கள் வாழ்வில் நிகழ்ந்த ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியும் என் உள்ளத்தில் பதிந்து உள்ளது. ஞானம் பெறாதவர் என்பதனால் எனக்கு அனுமதி இல்லையே. நான் என்ன செய்வேன்," என்று அழுது புலம்பினார். வாழ்க்கையே அழிந்து விட்டது போல அழுதார்.

கண்ணீர் வெள்ளத்தில் நனைந்தார். அப்போது தன் தம்பி தான் புத்தர் என்ற அவருடைய ஆணவம் நீங்கியது. குழந்தையைப் போல ஆன அவர் அப்பொழுதே ஞானம் பெற்றார். வெளியே வந்த சீடர்கள் சில விளக்கங்கள் கேட்பதற்காக ஆனந்தரை தேடினர். அவர் கூறிய விளக்கங்களை கேட்டு ஆச்சரியமடைந்த சீடர்கள் அவர் ஞானம் பெற்றதை அறிந்து மகிழ்ந்தனர். புத்தரின் போதனைகளை எல்லாம் அதன்பிறகு ஆனந்தரே தொகுத்தார்.

## விடுகதைகளும் விடைகளும்

• வயிறு முட்ட சாப்பிட்டால்தான் நிமிர்ந்து நிற்பான். அவன் யார்?

**பலூன்**

• உழைக்க உழைக்க உடலெல்லாம் தோன்றும். அது என்ன?

**வியர்வை**

• வாலிலே எண்ணெய் தலையிலே கொள்ளி. அது என்ன?

**விளக்குத் திரி**

• ஊளையிட்டுக் கொண்டே ஊரைச் சுமக்கும். அது என்ன?

**புகைவண்டி**

• கடல் நீரில் மறைந்திருக்கும் கல். அது என்ன கல்?

**உப்புக்கல்**

• நிறைவேறாத ஆசைகளை நித்திரையில் பெறலாம். அது என்ன?

**கனவு**

• கையால் இழுத்தால் அசையும் நாக்கு. கணீரென்று அனைவரையும் அழைக்கும். அது என்ன?

**மணியோசை**

## பாரதியார் பாடல்



எட்டய புரத்து மன்னருடன்
இனிதாய்க் காலம் கழித்திடவே
பட்டணம் சென்றனர் பாரதியார்.
பலநாள் சென்று திரும்பினரே.

வாசலில் குதிரை வண்டியுமே
வந்து நின்றதைக் கண்டதுமே.
ஆசையாய் வாசலை நோக்கி வந்தார்
அவரது மனைவி செல்லம்மா.

வண்டியை விட்டே பாரதியார்
மகிழ்வுடன் கீழே இறங்கி வந்தார்
வண்டியிலிருந்த பொட்டணங்கள்
வந்தன பாரதி பின் தொடர்ந்தே!

பட்டுப் புடைவை. பாத்திரங்கள்.
பற்பல நல்ல பொருள்களுமே
பொட்டணத்துள்ளே இருக்குமெனப்
பிரித்துமே பார்த்தனர் செல்லம்மா.

பட்டுப் புடைவையும். அங்கு இல்லை
பாத்திர பண்டமும் அங்கு இல்லை
பொட்டணத்துள்ளே இருந்ததெல்லாம்
புத்தகம். புத்தகம். புத்தகமே!

அரசர் கொடுத்தது ஐந்து நூறு.
அத்தொகை யாவுமே புத்தமாய்
இருப்பதறிந்ததும் 'ஐயையோ.
ஏனோ இப்பிடிச் செய்து விட்டீர்!

எனக்குப் பிடித்ததாய் ஏதுமில்லை.
இப்படிக் காசைக் கெடுப்பதுவோ?
சினத்துடன் மனைவி பேசிடவே
சிரித்துமே பாரதி கூறினரே

பட்டுப் புடைவை. வெள்ளியிலே
பாத்திரம். பண்டங்கள் வாங்காமல்
பட்டணம் சென்றே வீணாகப்
பணத்தைக் கெடுத்ததாய் எண்ணுகிறாய்

அழிகின்ற செல்வம் நான் கொடுத்தே
அழியாத செல்வம் கொண்டு வந்தேன்
அழகழகான கருத்தையெல்லாம்
ஆனந்தமாய் படித்தறிவோம்."

சிறுசிறு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு செய்தால் எந்த வேலையும் மிகக் கடினமாக இருக்காது.

~ ஹென்றி போர்ட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இரத்த ஆறை எப்படி ஓட வைத்திருப்பீர் என்று கேள்வி கேட்கப்பட்டதா?

முன்பெல்லாம் மாணவர்களிடம் நீவிர் ஜனாதிபதியாக வந்தால்; நாட்டின் பிரதமராக இருந்தால் எப்படி அரசாட்சி செய்வீர் என்று கட்டுரை வரைக எனக் கேள்வி கேட்பது வழக்கம்.

அவ்வாறான கேள்விக்குக் கட்டுரை எழுதிய அந்த மாணவப் பருவத்தை நினைத்துப் பார்க்கிறேன்.

நூற்று ஐம்பது சொற்களுக்குள் நாட்டை சொர்க்கலோகமாக மாற்றுவது போல கட்டுரை எழுதிய ஞாபகம்.

ஆனால் இப்போதெல்லாம் அப்படியான கேள்விகள் கேட்கப்படுவதில்லை.

இந்த உலகில் எந்த ஜனாதிபதியையும் எந்தப் பிரதமரையும் மிக உன்னதமானவர்களாக உதாரணப்படுத்த முடியாத நிலைமை வந்து விட்ட பின்பு, நான் ஜனாதிபதியானால்; பிரதமரானால் என்று மாணவர்கள் எப்படிக் கட்டுரை எழுத முடியும்.

ஆகையால்தான் அப்படியொரு கட்டுரை வினா தவிர்க்கப்பட்டதுபோலும்.

ஆபிரகாம் லிங்கன், ஜவர்கலால் நேரு, நெல்சன் மண்டேலா போன்ற தலைவர்களுக்குப் பஞ்சம் வந்துவிட்ட பின்பு ஜனாதிபதியாக, பிரதமராக மாணவர்கள் தங்களைப் பாவனை செய்வதை விரும்புவதில்லை என்ற காரணத்தாலும் அத்தகையதொரு கேள்விக்கு இசகு பிசகாக கட்டுரை எழுதப்பட்டு விட்டால் அது வேறு வில்லங்கமாகிவிடும் என்ற அடிப்படையிலும் ஜனாதிபதி, பிரதமர் என்ற பாத்திரங்களாக மாறி கட்டுரை வரைக என்ற வினா இப்போது கைவிடப்பட்டிருக்கலாம்.

ஆனாலும் இப்போதிருக்கின்ற சூழ்நிலையில், நான் ஒரு மாணவனாக இருந்தால் நாட்டில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து விசாரணை நடத்துவதற்கெனப் பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் நீவிர் ஓர் உறுப்பினராக இருந்தால்........ என்றுகட்டுரை எழுதுமாறு கேள்வி கேட்கப்படுவதை விரும்புவேன்.

அவ்வாறான கேள்வி கேட்கப்பட்டால், மாணவன் என்ற அடிப்படையில் என் கட்டுரை இவ்வாறாகவே இருக்கும்.

**ஹிஸ்புல்லா:** வடக்கு கிழக்கு இணைந்தால் இரத்தாறு ஓடும் என்று நான் கூறியது உண்மைதான்.

**தெரிவுக்குழு உறுப்பினர் (மாணவன்) :** வடக்கு கிழக்கு இணைந்தால் இரத்த ஆறை எப்படி ஓட வைப்பீர்

**ஹிஸ்புல்லா:** (கற்பனை) (மௌனம்)

**தெரிவுக்குழு உறுப்பினர் (மாணவன்):** கிழக்கு மாகாணத்தில் பள்ளிவாசல்களில் வைத்திருந்த வாள்களைக் கொண்டு தமிழ்மக்களை வெட்டிச் சரித்திருப்பீர்கள். அதன் மூலம் இரத்தாறு ஓடியிருக்கும்.

**ஹிஸ்புல்லா** (கற்பனை) மௌனம்

**தெரிவுக்குழு உறுப்பினர் (மாணவன்):** தற்கொலைக் குண்டுதாரிகள் மூலாக தமிழர் பகுதிகளில் குண்டுகளை வெடிக்க வைத்து பல்லாயிரக் கணக்கான தமிழ்மக்களைக் கொன்று குவித்து இரத்த ஆறை ஓட வைத்திருப்பீர்கள்.

**ஹிஸ்புல்லா:** (கற்பனை) மௌனம்

**தெரிவுக்குழு உறுப்பினர் (மாணவன்):** வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டால், இரத்த ஆறு ஓடும் என்று தான் கூறியது உண்மை என ஹிஸ்புல்லா ஏற்றுக்கொண்ட பின்பு கூட, அவரைக் கைது செய்யவில்லை என்றால் என்ன காரணம்... நூற்றைம்பது சொல் முடிந்துவிட்டதால்பதிலை நீங்களே கண்டறியுங்கள்.

# பாராளுமன்றத் தேர்தலை நடத்தி புதிய அரசு உருவாக்கப்பட வேண்டும் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு இதுவே

## டிலான் பெரேரா கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டு மக்கள் தற்போது புதிய அரசாங்கமொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே உள்ளனர். எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்கள் அபிப்பிராயத்தைக் கோரி பாராளுமன்ற தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுகக வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவினுடைய அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சரவையை மீண்டும் கூட்டுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

தொடர்ச்சியாக அமைச்சரவை கூட்டப்படாமல் இருந்திருந்தால் அரசியலமைப்பின் அடிப்படையில் புதிதாக ஒரு பிரதமரை நியமிக்க வேண்டி ஏற்பட்டிருக்கும்.

அரசியலமைப்பின் 46 (2) ஆம் அத்தியாயத்தின்படி தொடர்ந்து அமைச்சரவையைக் கூட்டாவிட்டால் அதே சந்தர்ப்பத்தில் பிரதமருக்கான அதிகாரங்கள இல்லாமல் போகும்.

இதன் போது புதிய பிரதமர் ஒருவர் அரசியலமைப்பின் பிரகாரம் கட்டாயம் நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு புதிதாக ஒரு பிரதமரை நியமிப்பது சாத்தியமற்றது.

காரணம் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பாராளுமன்றத்தில் 113 பெரும்பான்மை கிடையாது. இவ்வாறிருக்கையில் புதிதாக ஒரு பிரதமரை தெரிவு செய்வது கடினமானது.

இதனால் நாட்டில் மீண்டும் பாரியதொரு நெருக்கடி ஏற்படும். எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு தற்போது முழுமையாக சீர்குலைந்துள்ளதால் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு மக்கள் அபிப்பிராயத்தை நேரடியாகக் கோர முடியும்.

ஆனால் தேர்தலுக்குச் செல்வதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களின் அபிப்பிராயமே சிறந்த வழியாகுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கோத்தபாயவின் மீளாய்வு மனு ஜூலை 26 வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ள மீளாய்வு மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

அசல வெங்கப்புலி மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் இந்த மனு அழைக்கப்பட்டது.

இதன்போது வழக்கை எதிர்வரும் ஜூலை 26ஆம் திகதி வரை ஒத்திவைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேநேரம் சர்ச்சைக்குரிய அவன்கார்ட் சம்பவம் தொடர்பாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கை கொழும்பு நீதவான் நீதிமன்றில் விசாரிக்க விதிக்கப்பட்ட தடை உத்தரவு அன்றைய தினம் வரை நீடிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று மீளாய்வு மனு அழைக்கப்பட்ட போது இரு தரப்பினரும் தங்களது எழுத்துமூல அறிக்கையை மன்றில் சமர்ப்பித்தனர். (இ-7)

## பல்கலையில் பகிடிவதை தொடர்கின்றது 4 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

(ஏறாவூர்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு மாணவர்கள் மீது இரண்டாம் ஆண்டு மாணவர்கள் மேற்கொண்ட பகிடிவதையால் 4 பேர் காயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பீடத்தில் முதலாம் ஆண்டில் கல்விபயின்றுவரும் 4 மாணவர்கள் மீது சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு 2 ஆம் ஆண்டில் கல்வி பயின்று வரும் மாணவர்கள் பகிடிவதை மேற்கொண்டு அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இதனால் அவர்கள் படுகாயமடைந்த நிலையில் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டு.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகத்தினர் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## வெளிநாட்டு அகதிகளுக்கு நேற்று பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சை

(குருமன்காடு)

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளின் வெளிநாட்டு அகதிகள் பொலிஸ் பாதுகாப்புடன் வவுனியா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக நேற்று அழைத்துவரப்பட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் காரணமாக நீர்கொழும்பில் தங்கியிருந்த ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு அகதிகளில் ஒரு தொகுதியினர் இரண்டு கட்டமாக அழைத்துவரப்பட்டு வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தங்க வைக்கப்பட்டவர்களில் 10 பேர் வரையிலானோர் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டனர். சுமார் இரண்டு மணிநேரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று மருந்துகளைப்பெற்றபின் மீண்டும் அவர்கள் பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமுக்கு அழைத்து செல்லப்பட்டனர். (7-9-250)

## வழிப்பறிக்கொள்ளைகள் அதிகரிப்பு

பருத்தித்துறை- வீதியில் வல்லிபுரத்திற்கும் குடத்தனைக்கும் இடைப்பட்ட வீதியில் பயணிப்பவர்களை அச்சுறுத்தி சிலர் கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரவு நேரங்கள் மாத்திரமின்றி பகல் வேளையிலும் அப்பகுதியில் உள்ள மதுபான விற்பனை நிலையத்திற்கு அருகில் நிற்போரே கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபடுவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை இரவு அமரணியளவில் அவ்வீதியால் பயணித்தஒருவரை மறித்த கொள்ளையர்கள் அவரிடமிருந்த பணத்தைகொள்ளையடித்து விட்டு அவரை 5.00 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து அதிகாலையிலேயே விடுவித்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் பட்டப்பகலில்வீதியால் பயணித்த ஒருவரின் பணத்தை வாள்முனையில் அச்சுறுத்தி அபகரித்துள்ளனர்.

கொள்ளையில் ஈடுபடுபவர்களிற்கும் பொலிஸாருக்கும் நெருக்கமான தொடர்புகள் உள்ளதாக நம்பும் பொது மக்கள் பொலிஸில் முறையிட அச்சம் தெரிவிக்கின்றனர். இவ் விடயம் தொடர்பாக உரியவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் எதிர் பார்க்கின்றனர். (5-60)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் மாற்றுவதே ஆன்மீகத்தின் பணி.
- மிருகம், மனிதன், தெய்வம் ஆகிய மூன்று குணங்களும் சேர்ந்த கலவையாக மனிதன் இருக்கிறான்.
- மரணம் வருவது உறுதியாக இருக்கும் போது, நல்ல ஒரு செயலுக்காக நம் உயிரை விடுவது மேலானது.
- வெற்றி தோல்வியைப் பற்றிய சிந்தனை வேண்டாம். தியாக உள்ளத்துடன் சேவை செய்வதில் இறங்குங்கள்.
- எண்ணத்தைப் பொறுத்தே உலகத்தை அளக்கிறோம். அழகும், அவலட்சணமும் மனதில் தோன்றும் எண்ணத்தின் வெளிப்பாடே.

# பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயம் சம்பியன்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய அணி வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

கடந்த புதன்கிழமை கிளிநொச்சி சென். திரேசா மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற இப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தா அணியினை எதிர்கொண்டு விளையாடிய அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய மகளிர் அணியினர் போட்டியில் வெற்றிபெற்று வட மாகாண சம்பியன் பட்டத்தை தட்டிக் கொண்டது.

இந்த வெற்றி குறித்து கருத்து வெளியிட்ட அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய அதிபர் நா.இராதா கிருஷ்ணன், "இப் போட்டியில் வெற்றிபெற்று வடமாகாண சம்பியன் ஆகிய நாங்கள், தேசிய ரீதியிலும் வெற்றிபெறுவோம் எனவும், அதற்கான சகல உதவிகளையும் எமது மாணவிகளுக்கு பெற்றுக்கொடுப்போம்" எனவும் தெரிவித்தார். (க)




## நேதாஜி,றெயின்போ அணிகள் அரையிறுதிக்கு தகுதி





நேதாஜி விளையாட்டுக் கழகத்தால் வல்வைக் குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான 9 நபர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் நேதாஜி அணி தீருவில் அணியை 3:0 எனவும் றெயின்போ அணி சைனிங்ஸ் அணியை 1:0 எனவும் வெற்றி கொண்டு அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன. (க)

## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி ஆஷிகா சாதனை



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் வருடாந்தம் நடைபெறும் பளுதூக்கும் போட்டியில் தொடர்ந்தும் ஆறு வருடங்களாக (2014.2015. 2016, 2017, 2018, 2019) தங்கப்பதக்கம் வென்ற ஒரேஒரு சிரேஷ்ட வீராங்கனையாக சாதனை படைத்தார் யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி ஆஷிகா . (க)

## தூய ஒளி வெற்றிக்கிண்ணம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது ஞானமுருகன் அணி



மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 33 ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி குருநகர் பாடும்மீன் விளையாட்டு மைதானத்தில் தொடர்ந்து நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டியில் கடந்த 13 ஆம் திகதி சென்மேரிஸ் அணியினரை எதிர்த்து ஞான முருகன் அணி மோதியது. இரு அணியினரும் கோல்களை போடுவதற்கு முனைப்போடு போராடினர். இறுதியில் ஞானமுருகன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (க-106)

## விஜயரட்ணம் வெற்றிக்கிண்ணம்

# திருநெல்வேலி கிரிக்கெட் அணியை வெற்றிகொண்டது கிறாஸ்கொப்பர்ஸ்

யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அழைக்கப்பட்ட 8 அணிகளுக் கிடையில் விஜயரட்ணம் ஞாபகார்த்த இருபது - 20 சுற்றுப் போட்டியானது ஞானம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

8 அணிகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியில், அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் இடம்பெறுகின்றன.

திருநெல்வேலி கிரிக்கெட் அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் அணி, டிலோசன் மற்றும் அஜித் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தால் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 165 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் டிலோசன் 48, அஜித் 41, மதுசன் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி அணி சார்பாக, சுரேந்திரன் 18 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும், சுரேஸ் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

166 ஓட்டங்களை பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலளித்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் அணி, தொடக்கம் முதல் அடுத்தடுத்து விக்கெட்களைப் பறிகொடுத்து வந்தது.

16.3 ஓவர்களில் 108 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து, 57 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் றொகான் 25, அனுரகாந்தன் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி சார்பாக, ஜனந்தன் 23 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை கைப்பற்றினார். (க-26)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## சரஸ்வதி இளைஞர் கழகம் சம்பியன்




நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது.

மேற்படி விழாவில் நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் சம்பியனாகியது சரஸ்வதி இளைஞர் கழகம்.

கபடி போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. (க)

# தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்

வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 72வது வருட நிறைவை முன் னிட்டு நடத்தப்படும் மாபெரும் பாரம்பரிய விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க)

## 3 மணி நேரம்...

பதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தார்.

மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் குறித்து வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் முன்னிலையாகியிருந்தார். (ம-3)

## ஆவா குழுவின...

தாக்குதலுக்கு பதிலளிக்கு முகமாக ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார். இத்தாக்குதலானது வட மாகாணத்தை மையப்படுத்தி ஆயுத வன்முறையிலும் பல்வேறு சமூக விரோத செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வரும் ஆவா குழுவினரால் நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இவர்களின் பிரச்சினை தொடர்பாக ஜனநாயக ரீதியிலான கலந்துரையாடலை இக்குழுவினருடன் மேற்கொள்ள தான் தயா ராக இருப்பதாக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்திற்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையினையும் நாட்டின் எப்பகுதி யிலுமுள்ள எந்தச் சமூகத்தின் மீதும் மேற் கொள்ள அனுமதிக்க முடியாது. எந்தவொரு பிரச்சினையும் தீர்ப்பதற்கு சிறந்த வழி ஜனநாயக ரீதியிலான கலந்துரையாடல் களை மேற்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாப்பதேயாகும் என ஆளுநர் வலியு றுத்தினார். இதற்காக தான் எந்நேரமும் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நான் நேரிலே சென்று ஆவா குழுவி னரை சந்தித்து அவர்களுடைய பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடவுள்ளேன். வடக்கு மக்களின் வாழ்க்கையினை சிதைப் பதற்கான காரணம் என்ன என வினவ வுள்ளதாகவும் தெரிவித்த ஆளுநர் இதற்காக எவ்வித பாதுகாப்பு ஏற்பாடுகளுமின்றி அவர்களை சந்திக்கத் தயாராக இருப்பதாக பகிரங்க அழைப்பினை ஆளுநர் விடுத் துள்ளார். (ம-3)

## முஸ்லிம் குடி...

களில் இருக்கும் அமைச்சர்களும் முஸ்லிம் அடிப்படைவாதத்தை ஊக்குவிப்பதற்கு நிதி உதவிகளை வழங்கி வந்தமையை அறியக் கூடியதாக உள்ளது.

முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் கிழக்கில் அதிகளவான தமிழர் காணி களைப் பெயர்மாற்றம் செய்து முஸ்லிம் குடியேற்றங்களை ஸ்தாபித்துள்ளார். அதுமட்டுமல்லாமல் கிழக்கில் ஆசிரிய நியமனத்திலும் தமிழர்கள் புறக்கணிக்கப் பட்டு அதிகளவில் முஸ்லிம் ஆசிரியர்களே சேவையில் உள்வாங்கப்பட்டனர்.

நாட்டின் முன்னைய காலங்களில் ஏற்றுமதி இறக்குமதித்துறைகளில் ஈடுபட்ட தமிழ், சிங்கள வர்த்தகர்கள் புறந்தள்ளப்பட்டு முஸ்லிம் வர்த்தகச் சாம்ராஜ்யமாக மாற்றப் பட்டுள்ளது என்றார். (ம-3,10)

## இந்து - பௌத்த...

யில், "10 வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்ற யுத்தத்தை மனதிற்கொண்டு பௌத்த, இந்து மக்கள் பிரிவினையுடன் செயற்படக் கூடாது.

வடக்கு மற்றும் கிழக்கில் சில இடங் களில் இவ்விரு மதத்தைச் சேர்ந்த மக்களுக் கும் இடையில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காகவே நாம் வவுனியா விற்கு விஜயம் செய்துள்ளோம்.

நாட்டில் தற்போது இந்து, பௌத்த மக்கள் மத்தியிலும் சில பிரதேசங்களிலும் ஒற்று மையின்மை ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் இந்து, பௌத்த மக்களின் ஒற்றுமை நாட்டுக்கு அவசியமாகியுள்ளது" என்று அவர் குறிப்பிட்டார். (ம-3)

# சமூக விரோத செயற்பாட்டை யாழில் கட்டுப்படுத்துக

## புதிய பொலிஸ் அத்தியட்சகரிடம் ஆளுநர் சுரேன் ராகவன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட புதிய பொலிஸ் அத்தியட் சகர் நிஹால் தல்துவ, ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று முற்பகல் ஆளுநர் செயலகத்தில் சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது யாழ் மாவட்டத் திலும் வட மாகாணத்திலும் சட்டவிரோத மாகச் செயற்பட்டுவரும் சமூக விரோத



குழுக்களை கட்டுப்படுத்துவதற்குரிய நட வடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆளுநர் பொலிஸ் அத்தியட்சகரிடம் கேட்டுக் கொண் டார்.

அத்துடன் பொதுமக்களின் பாதுகாப் பினை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டார். (ம-3)

## சஹ்ரானுடன்...

பிரிவு தெரிவித்துள்ளது.

பாதுகாப்புப் படையினரும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரும் இணைந்து மேற் கொண்ட சுற்றிவளைப்பு தேடுதல் நட வடிக்கையின்போது குறித்த இருவரும் கண்டியிலுள்ள ஹின்குள்ள பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித் துள்ளது. (ம-3)

## விபத்...

மடைந்த நிலையில் 19 வயதுடைய இளைஞர் நேற்று பிற்பகல் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். அவரை வைத்திய சாலையில் சேர்ப் பித்தவர், தகவல் எதனையும் வழங் காமல் அங்கிருந்து சென்றுவிட்டார்.

படுகாயமடைந்த இளைஞர், முழுமையான சுயநினைவற்ற நிலையில் தனது பெயரை மித்திரன் எனத் தெரிவித்துள் ளார். அவர் சத்திர சிகிச்சைக்காக சத் திரசிகிச்சை கூடத் துக்குக் கொண்டு சென்ற வேளை உயிரிழந்துள்ளார்.

அதனால் அவ ரது சடலம் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப் பட்டுள்ளது.

எனினும் இளை ஞர் தொடர்பான விபரங்களோ அல் லது விபத்துத் தொடர்பான விபரங் களோ அறியக் கிடைக்கவில்லை" என்று யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலை தக வல்கள் தெரிவித் தன. (ம-3)

தரம் - 5, க.பொ.சாதாரண பரீட்சையில்

# தேசிய தரப்படுத்தல் இனி வெளியாகாது

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை என்ப வற்றின் தேசிய மட்ட தரப்படுத்தல் முடிவுகள் இனி வெளிப்படுத்தப்படமாட்டாது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

"தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை என்பவற் றின் தேசிய மட்ட தரப்படுத்தல் (Island Best Rank) இனிவரும் காலங்களில் வெளியிடப் படமாட்டாது. அதனூடாக மாணவர்களுக்கு ஏற்படும் மனத்தாக்கத்தைக் குறைக்கவே இந்த முடிவு எடுக்கப்பட்டது என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, க.பொ.த. உயர் தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய மற்றும் மாவட்ட நிலை தரப்படுத் தல்கள் வெளியிடப்படும் என்பது குறிப் பிடத்தக்கது. (ம-3)


## பணிப்பெண் தேவை

வெள்ளவத்தையில், கௌரவ மான சிறிய குடும்பம் ஒன்றிற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. உடனே தொடர்பு கொள்ளவும்

0770527090



# பெறுகை அறிவித்தல்

## பருத்தித்துறை நகர சபை

## சபை நிதி - 2019

01. தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக் குழு, பருத்தித்துறை நகர சபை அவர்களினால் தகுதிவாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருட்களை கொடுப்பனவு செய்வதற்காக கோரப்படுகின்றது.
02. தேசியப் போட்டிகேள்விகோரல் நடைமுறைக்கமைவாக கேள்விகோரப்படுகின்றது.
03. கேள்விபெற தகுதியுடையாவதற்குவெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையானதகைமைகள், பெறுகைஆவணம் பகுதி 111 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவுஅட்டவணை (Schedule) கேள்விஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள வழங்குனர்கள் பருத்தித்துறை நகர சபை அலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 15.00 மணிவரை 17.06.2019 ஆம் திகதியிலிருந்து 28.06.2019ஆம் திகதிவரையானகாலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள வழங்குனர்கள் ஆங்கில மொழியிலுள்ள பூரணமான கேள்வி ஆவண மொன்றை கல்லூரி வீதி, பருத்தித்துறை எனும் முகவரியில் அமைந்துள்ள பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் 17.06.2019 தொடக்கம் 02.07.2019 ஆந் திகதிவரை அலுவலக நாட்களில் மு.ப 9.00மணிமுதல் 15.00மணி வரை மீளளிக்கப் படாத பணமாக ரூபா.2340/- (வற், NBT உட்பட) செலுத்திபெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து03.07.2019 ஆந்திகதி 15:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக் குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியிலுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்குஅல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.
08. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு) நாட்கள் (16.09.2019) வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் 24.06.2019 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.
10. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைவைப்புத் தொகையினை பணமாக செலுத்திபற்றுச் சீட்டினைகேள்வி ஆவணத்துடன் இணைக்கவேண்டும்.
11. இந் நிபந்தனைகள் கேள்வி கோரப்பட்ட பின்னர் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

| இல | வேலை விபரம் | ஒப்பந்த இல | தேவைப்படும் எண்ணிக்கை | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விபிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மீளளிக்கும் பிணைவைப்பு (ரூபா) | வைப்பு செல்லுபடியாகும் காலம் |
| 1 | Supply of 30w Metal Shad Street Light | NP/14/41(5)/PO/30/2019 | 100 | 01 மாதம் | பதிவுசெய்யப்பட்ட வியாபார அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல். | 7000.00 | 16.09.2019 |
| 2 | Supply of 50w Cobbra LED Street Light | NP/14/41(5)/PO/31/2019 | 50 | 01 மாதம் | பதிவுசெய்யப்பட்ட வியாபார அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல். | 3500.00 | 16.09.2019 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
பருத்தித்துறை நகர சபை. பருத்தித்துறை.

2019.06.15 (C-6691)













## PERSONAL CLASSES
(பிரத்தியேக வகுப்புக்கள்)

தரம் 8 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர் களுக்கான கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் தனியாகவும் குழுவாகவும் வீடு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு:- 076 157 0107

## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. வயதானவர்களும் ஊனமுற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் மாதம் - 15000/= (C-6593)
தொ.பே:- 0771681697, 0766205322

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

இப்பொழுது!!!
மிகக்குறைந்த கட்டணத்தில்
UK - 350/=
France, Germany, Italy, Denmark - 500/=
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna. (C-6656) 0777 554 528

## FALC FRENCH LANGUAGE CENTRE
# பிரெஞ்ச்

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, அரியாலை, 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் :22.06.2019 சனி காலை 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 24.06.19 3.30 pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

## விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி- 700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg (C-6532)
DELIVERY IN 3-5 DAYS
மாவிட்டபுரம் 0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS

## சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.
UK - 525.00, Germany - 675.00, France - 830.00
நிபந்தனைகள் எதுவும் இல்லை
அருள்
இல.1, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576 (C-6615)

## British College of Higher Studies

| IELTS | IELTS |
|---|---|
| *Academic / General* | *Life skills (A1, B1)* |
| Student / Migration visa | திருமணமாகி செல்பவர்களுக்கு |

for students or spouse who wish to proceed to
**Australia, U.K, Canada, USA & New Zealand.**

Course duration 2 months (T & C Applied) — Highly experienced lecture panel
Week day & weekend batches — Individual attention

100 % success level assured
Sirambiyady lane off Stanley road Jaffna Call: 021 222 4550 (C-6611)

## மது...

குறித்த இரு நாட்களிலும் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மதுபான சாலைகளும் மூடப் பட்டுள்ளன. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
# af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்


## 16ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்: 14.08.1950 — அமரர் — மறைவு: 01.06.2019

### சிவசுப்பிரமணியஐயர் மகாதேவஐயர்


கடந்த 01.06.2019 சனிக்கிழமை அன்று சந்நிதியான் பாதம் சரணடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் **சிவசுப்பிரமணியஐயர் மகாதேவஐயர்** அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 16.06.2019 ஞாயிறுக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தயவு கூர்ந்து இவ்வழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம். (8873)

செல்வச்சந்நிதி கோவிலடி, தொண்டைமானாறு.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### சின்னையா நாகமுத்து

பிறப்பு: 19.01.1950 — இறப்பு: 14.06.2019

வாதரவத்தை புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா நாகமுத்து நேற்று (14.06.2019) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் ஆருயிர்க் கணவரும் பத்மலோஜினி, காலஞ்சென்ற பிறேமலதா (கலா) மற்றும் செல்வரூபினி (மந்திகை ஆதார வைத்தியசாலை), நவனீதராஜா (மேற்பார்வையாளர் - பருத்தித்துறை பிரதேச சபை), பிரதீபராஜா (சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்), றஜிதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் புவேந்திரன், காலஞ்சென்ற கணேஸ்வரன் மற்றும் சோபனா, ஸ்ரீதேவி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கமநல சேவை நிலையம் - புத்தூர்), எட்றோசான் (எபி - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுர்ஷா, துபாஷன், சுஜீவன், சுஜீபா, ரனேஷன், சேஷ்மிகா, தருண், நிருண், எவிசன் (சுவிஸ்), எயானா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் குமாரவேலு, நாகரத்தினம், செல்லையா, சிவகுரு, பகவதி, தங்கவேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அன்னராசா மற்றும் செல்லம்மா, அன்னம்மா, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சிவயோகம், காலஞ்சென்ற சின்னராசா மற்றும் சிவகமலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கணேசலிங்கம் (சுவிஸ்) உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் சித்தப்பாவும் கணேசதாஸ் (ஜேர்மனி), மல்லிகாமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் வாதரவத்தையில் உள்ள (பாடசாலை முன்பாக) அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வாதரவத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வாதரவத்தை, புத்தூர்.

தகவல்: குடும்பத்தினர்
077 991 2336, 077 933 5992


## முதலீட்டாளர் கருத்துக்களம் - யாழ்ப்பாணம்

எதிர்வரும் ஜுன் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் 11.30 வரை
Tilko Jaffna City Hotel- Jaffna

பங்குச் சந்தை முதலீட்டு நிபுணர்களின் கருத்துப்பரிமாற்றங்களுடன் கூடிய முதலீட்டு ஆலோசகர்கள் சந்திப்பு.

அனுமதி இலவசம்

முன்பதிவுகளுக்கு:- 021 222 1455 / 0777 822 014 / 0777 105 205

CSE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
செல்வம் மற்றும் வெகுமதியின் பிறப்பிடம்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.